# கலைச்செல்வி



25

1960

மார்ச்



உங்கள் வியாதி
எதுவானாலும் சிறந்த
வைத்திய ஆலோசனை
பெற்றுக் கொள்க
Sellam
மக்கள் வைத்திய சாலை
சுன்னாகம்

2 — 11/12

யாழ்ப்பாணம் கொக்குவில்

பிரமஸ்ரீ இ. சி. இரகுநாதையர் கணித்துதவிய

## 1961ம் வருட

# விவேகானந்தா

# திருக்குறட் கலன்டர்

## டயறிகள்.

விற்பனையாகிறது! வாங்கிக்கொள்ளுங்கள்!!

திதி, யோகம், நட்சத்திரம், சுபாசுப நேரங்களின் தொடக்கம், முடிவு முதலியவற்றைத் தெரிவுறக் காட்டும் கலண்டர். திருக்குறள், அவற்றின் கருத்துரைகள் பொன்மொழிகள், சைவ, புத்த, கிறிஸ்தவ, ஸ்லாமிய பெருநாட்கள், ஆலய உற்சவ தினங்கள் யாவற்றையும் தெளிவாகக் காட்டுகிறது.

பெரியார்களின் புகைப்படங்களும் பெருநாட்களை உணர்த்தும் அடையாளங்களும் இடம் பெற்றுள்ளன. 1961ம் ஆண்டிற்கு மிகச் சிறந்த தாயாரிப்பு எனப் பலராலும் போற்றப்படுகின்றது. இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் கிடைக்கும்.

தயாரிப்பாளர்கள்:

**விவேகானந்தா அச்சகம்-புத்தகசாலை,**

போன் : 517 (தொடர்புகள் 3) தந்தி : பிறின்ரேஸ்

விவேகானந்தாக் கட்டிடம், : யாழ்ப்பாணம்.

கிளை:

230, ஆதிருப்பள்ளித்தெரு, : கொழும்பு.

த. பெ. எண் 853.

போன் : 79260 — தந்தி : விவேப்பிறெஸ்.

**S. SINNATHURAI & BRO.,**

Importers & Exporters.
Sole Agents for

**786 Kalki Beedies**




நீங்கள்
உல்லாசமாகப்
புகைப்பதற்கு

**786 கல்கி பீடிகள்**

திறம் பீடிப் புகையிலை, பீடி இலை.

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்
கொள்ளலாம்.

**சி. சின்னத்துரை அன் பிறதர்,**

39, K. K. S. ரோட் : : யாழ்ப்பாணம்.

கிளை:
44, 3ம் குறுக்குத் தெரு : . கொழும்பு.

தொழிற்சாலை:
118/12, ஆட்டுப்பட்டித் தெரு : : கொழும்பு.

# FANCY PALACE

## THE HAPPY PALACE
WITH
## HAPPY GIFTS

- ரேயல் தலைமுடிகள்
- ரேயல் சுவர்க்கடிகாரங்கள்
- ஷெவ்வேர்ஸ் பவுண்டன் பேனாக்கள்

ஆகியவற்றிற்கு

## யாழ்ப்பாணத்தில்
### ஏக விநியோகஸ்தர்கள்

கண்ணைக் கவர்ந்து மனதை மயக்கும்
பலவிதமான

## பரிசுப் பொருட்களை
### விசேட தினங்களில்

உங்கள் உற்றார் உறவினருக்கும், நண்பர்களுக்கும்,
பேனா நண்பர்களுக்கும்

### வாங்கிக் கொடுங்கள்

தந்தி : Fancyware          போன் : 239

# பான்ஸி பலஸ்,

27, மெயின் வீதி : : யாழ்ப்பாணம்


சுத்தமாக

சுகாதாரமுறைப்படி

நவீன இயந்திரங்களினால்

விலையுயர்ந்த மூலப்பொருட்களைக் கொண்டு

தயாரிக்கும்

# பேபி  மார்க்



# ஸ்பெஷல்

## பானங்களையே அருந்துங்கள்

எல்லா இடங்களிலும் கிடைக்கும்

தயாரிப்பாளர்

**சுப்பிரமணியன் சோடாக் கம்பெனி**

போன்: 97 வல்வெட்டித்துறை தந்தி: SODA

கிளை:

**ராஜா ஸ்ரோர்ஸ்**

போன்: 372

2/B, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

தந்தி: ESVES

# பாலபோதினி

## சிறந்த பாடப் புத்தகங்கள்

**கீழ்ப்பிரிவு (அரிவரிப் புத்தகம்) தொடக்கம் 7ஆம் வகுப்பு வரையும் கிடைக்கும்.**

**பாலபோதினி 1—7ஆம் புத்தகங்கள்**

1952ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 29ஆந் திகதி வெளிவந்துள்ள இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் உதவி நன்கொடை பெறும் தன்மொழிப் பாடசாலைகளுக்கும் இருபாஷைப் பாடசாலைகளுக்கும் ஆங்கில பாடசாலைகளுக்குமான ஒழுங்குச்சட்டத்தின் 19 (A) ஆம் பிரிவில் பிரசுரிக்கப் பட்ட திற்கமைய இப் புத்தகங்கள் 1, 2, 3, 4, 5, 6, 7ஆம் வகுப்புக்களில் வாசிப்புத்தகங்களாக 1953 ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆந் திகதி வரை உபயோகித்தற்கு வித்தியாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

இக் காலத்திற்கேற்ற முறையில், ஒவ்வொரு பாடப் புத்தகமும் தனித்தனி அனுபவம் பெற்ற சிறந்த ஆசிரியர்களின் பெருமுயற்சியால் எழுதப்பட்டு வெளியிடப்பட்டிருக்கிறது. பாடங்களுக்கேற்ற சித்திரங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பாட இறுதியிலும் அப்பியாசங்கள் **விளக்கம், பேச்சு, எழுத்து** என்று மூன்று பிரிவுகளாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. செய்யுட்பகுதிகளின் உரையும் இறுதியிற் சேர்க்கப்பட்டிருக்கிறது. இப் புத்தகங்கள் எல்லா மத பாடசாலைகளிலும் பாகுபாடின்றி உபயோகிக்கப்படுகின்றன.

**தனலக்குமி புத்தகசாலை, சுன்னாகம்.**

# கலைச்செல்வி

யாழ்-தமிழ் இலக்கிய மன்றத் திங்களிதழ்.

கலை : 2 | சார்வரி—மார்கழி. : தி. ஆ. 1991 | காட்சி: 11—12

## பொருளடக்கம்.

தொடர்கதை:
மனப்பாறை.
சிறுகதை:
ஆசையும் பாசமும்.
கட்டுரை:
அண்ணாமலை நகரிலே.
ஓவியக்கலை.
இலக்கியத்தில் காகம்.
கவிதை:
உயர்திருநாள.
பிற:
வணக்கம்.
வாசகர் வாய்மொழி.
பட் பட்.
இளைஞர் மன்றம்
அ. வ. போட்டி.
விழல் ஆராய்ச்சிகள்.

அட்டைப் படம் : ஆதவன்


# யான் பெற்ற செல்வம்

நவநாகரிகத்திற்கேற்ற

புடவைத் தினுசுகள்
அன்பளிப்புப் பொருட்கள்
சாய்ப்புச் சாமான்கள்
சப்பாத்து வகைகள்
அலங்காரச் சாமான்கள்
றங்குப்பெட்டி சூட்கேஸ்கள்
முடிமயிர் வகைகள்

இன்னும் உங்கள் தேவை எதுவானாலும் யாழ்ப்பாணத்தில் நம்பிக்கையுடன் சகாய விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

# கணேசன் ஸ்டோர்ஸ்

(உரிமையாளர்: க. செ. கனகசபை)

78, கே. கே. எஸ். வீதி : யாழ்ப்பாணம்.

# வணக்கம்

தமிழ் மக்களின் ஆதரவையும் பண உதவியையும் கோரித் தமிழ் பல்கலைக் கழக இயக்கத்தினர் பிரசாரக் கூட்டங்கள் நடாத்தினர். அவற்றைத் தொடர்ந்து இந்துப் பல்கலைக் கழகம் பற்றிய பேச்சு எழுந்தபோது, 'ஒன்றை ஒன்று விழுங்கிவிடுமோ? என்ற பயம் பலருக்கு ஏற்பட்டது. அந்தப் பயத்தை ஓரளவுக்கு நீக்கிவிட்டார் **தமிழறிஞர் நடேசபிள்ளை** அவர்கள். இந்துப்பல்கலைக் கழகம் நடாத்துவதற்கு அரசாங்கத்தின் அனுமதியைப் பெற்று விட்டார். நமது நன்றியையும் பாராட்டுக்களையும் அப் பெருமகனு ருக்குத் தெரிவிக்கின்றோம். ஈழம் வாழ் இந்துக்களின் கலாச்சாரச் சின்னமாக இக் கழகம் அமையும் என்பது நமது நம்பிக்கை.

நம் நாட்டு எழுத்தாளர்களின் படைப்புகளைப் படித்து வரும் **டாக்டர் மு. வ., கி.வா.ஜ , அகிலன், சிதம்பர ரகுநாதன், வல்லிக் கண்ணன், விஜயபாஸ்கரன், பூவை ஆறுமுகம், பார்த்தசாரதி** முதலியோர் இங்கே சில நல்ல எழுத்தாளர்கள் இருக்கின்றார் கள் என்பதை ஒப்புக்கொண்டுள்ளனர். ஆனால் நமது படைப் புகள் எதையுமே படிக்காத 'பகீரதன்.', 'ஈழத்து எழுத்தாளர் பத்து வருடம் பின்தங்கிவிட்டார்கள்' என்று கூறியிருக்கின் றார் ஒரு பத்திரிகையின் ஆசிரியராக இருப்பவர் பொறுப்பற்ற முறையில் இப்படிக் கூறியது வருந்தத் தக்கது. என்றாலும் மன் னித்து விடுவோம்! அவர் கூறிய கருத்தைத் தொடர்ந்து நல்ல தொரு 'இலக்கிய சர்ச்சை' நடைபெற்று வருகின்றது இந்தச் சர்ச்சையில் எழுத்தாளர்கள் கலந்து கொண்டு தம்மைப் பற் றியோ, தம்மைச் சேர்ந்தவர்களைப் பற்றியோ எடுத்துக் கூறு வதிலும் பார்க்க, வாசகர்கள் அதிக அளவில் கலந்து கொண்டு தமது கருத்துக்களைத் தெரிவித்திருந்தால், பல நன்மைகள் ஏற்பட் டிருக்கும்.

இந்த இதழில் **சாந்தினி** எழுதிய நல்ல சிறுகதை வெளியா கின்றது. ஈழத்தின் சிறந்த எழுத்தாளர்களுள் ஒருவரான இப் பெண்மணி, யாழ்ப்பாணத்திலுள்ள அமெரிக்க நூல் நிலையத்தில் கடமையாற்றுகின்றார். அற்ப காகத்தைப் பற்றித் தன் வானொ லிப் பேச்சில் ஆராய்கின்றார் தமிழ்ப்பண்டிதர் **ச ப சர்மா** அவர்கள். மார்கழி மாதத்தில் கிறிஸ்தவர்களின் புனித தின மான நத்தார் வருகின்றது. நல்லூர் ஆசிரியர் பயிற்சிக் கலா சாலையைச் சேர்ந்த **'ஜீவா'** அதுபற்றி நல்லதொரு கவிதை எழுதியுள்ளார். மற்றைய அம்சங்களும் வழக்கம் போலவே சுவை யாக அமைந்துள்ளன.

—ஆசிரியர்.

# வாசகர் வாய்மொழி

ஏழையின் ஆஸ்தி.
ஏழையிடம் தான் இதயம் உண்டு. வறுமையில் தான் அழகுண்டு "கலைச்செல்வி"யிடம் தான் இலக்கியப் பொக்கிஷம் உண்டு.
நல்லூர். மு. சற்குணம்.

நாகராசா! வாப்பா!
ஐப்பசி இதழில் வெளியான நாகராசனின் "நம்பிக்கை" அருமையான கதை. அகமதுவாப்பா என் உள்ளத்தில் உலவிக்கொண்டேயிருக்கிறார்.
கொழும்புத்துறை, இளங்குமரன்.

காதலெனும் தீவாரிலே!
தீவான் எழுதிய "காதலியா காதகியா" அழகாகவும் கவர்ச்சியாகவும் இருந்தது. இதுபோன்ற கதைகளை அடிக்கடி வெளியிடுங்கள்.
சின்னக்கிண்ணியா, காலிதீன்.

படமா (அம்மா!
கார்த்திகை இதழ் அட்டைப் படம் கண்டேன். படமா அது? உயிரோவியம். இத்தனை சிறப்புடன் வரையும் ஓவியரும் இலங்கையில் இருக்கின்றாரா? தோழி மாலதிக்கு என் வாழ்த்துக்கள்.
திருவல்லிக் கேணி. ஆர். நாகராஜன்

மண்டூகம்!
மண்டுக்கிழார் எழுதிய அற்புத ஆலோசனைகளைப் படித்து விழுந்து விழுந்து சிரித்தேன். சென்ற ஆண்டில் தாங்கள் வெளியிட்ட வளரும் எழுத்தாளர் மலரில் எழுதிய ஓர் இளம் எழுத்தாளர்தான் இந்தப் புனைபெயருள் மறைந்திருக்கிறரென்று நினைக்கின்றேன். என் ஊகம் சரியா?
இறக்குவானை, ஞானமணி.

பாறை(யா)மனம்?
தொடர்கதை எங்களை ஆட்கொண்டுவிட்டது. சிவஞானத்தையும் சரசுவையும் மறக்கவே முடியவில்லை. திருட்டுக் கொடுத்த சிவஞானத்திற்கு என்ன நடந்தது என்பதை அறியத் துடித்த நேரத்தில் 'தொடரும்' என்று போட்டுவிட்டீர்களே, உங்கள் இதயம் என்ன இரும்பா, கல்லா?
வெள்ளவத்தை. கண்ணன், ராஜம், மனேகரி, லீலா.

நான் படித்தவை,
பென்னுத்துரையின் கருத்துக் கட்டுரை படித்தேன். இத்தகைய பொன்னுத்துரைகள் இருப்பதை அறியாது பகீரதன் ஈழத்து எழுத்தாளரைப் பற்றிக் கூறி ஆப்பை இழுத்து அல்லற்படுகிறரே! சு. வே. வின் 'தகிப்பு'—அச்சா.
சுண்டிக்குளீ, க. பே. முத்தையா.

ஒன்றல்ல இரண்டல்ல, தம்பி!
மாஸ்டர் சிவலிங்கத்திடம் சொல்லுங்கள், சென்னைக்கு அவர் மாத்திரம் செல்ல வில்லையென்று. பெரிய இரும்புப் பீப்பாவில்—வண்டியில் வைத்துக் குடிபானத்தைக் கொண்டு செல்லும் பழக்கத்தை எங்காயினும் அவர் கண்டதுண்டாமோ?
அச்சுவேலி, க. இராசரத்தினம்.

ஈழத்துப் 'பிலஹரி'
சு. வே. அவர்களின் 'தகிப்பில்' ஆழம் இருக்கிறது, 'பிலஹரி' ஈழத்தில் ஒருவர் இருக்கிறர்.
மாணுமதுரை ஜி. அனந்தகிருஷ்ணன்

உன்னைக்கண்டு நான் பாட!
வெள்ளம் போலும் கற்பனைகள் உள்ளம் தன்னில் இனிக்கிறதே.
கள்ளம் கபடம் தெரியாத எங்கள் செல்வி கலைச்செல்வி.
பள்ளம் மேடு காடெல்லாம் சுடராய் விளங்கி முழங்கி நிற்கும்.
வெள்ளை இதயக் கமலத்தில் வீற்றிருப்பாய் கலைச்செல்வீ!
நல்லூர். S. பூரணி

# நகைச்சுவைக் கட்டுரைப் போட்டி.

நீதிபதிகளின் தீர்ப்பின்படி கீழ்க்கண்ட இருவரும் முதலிடம் பெறுகின்றனர்.

திரு. T. பாக்கியநாயகம்,
9, அருணகிரி வீதி,
மட்டக்களப்பு.

திரு. க. பரராஜசிங்கம்
S. H. A.
கைதடி.

**பரிசுத் தொகை 50-00 ரூபாவையும்**
சமமாகப் பகிர்ந்து இருவருக்கும் வழங்குவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

'கலைச்செல்வி' ஆசிரியருடன், **திரு. குயுத்தியார் திரு. தேவன்—யாழ்ப்பாணம்** ஆகியோர் நீதிபதிகளாகக் கடமை யாற்றினர்.

பரிசு பெற்ற நாடகாசிரியர் **சொக்கன்** அவர்கள் ஒரு பரிசை வழங்க முன்வந்துள்ளார்.

பரிசளிப்பு விழா விரைவில் நடைபெறும். பரிசுக் கட்டுரைகளும், நீதிபதிகளின் பாராட்டுதல்களைப் பெற்ற கட்டுரைகளும் அடுத்த இதழிலிருந்து வெளியாகின்றன.

அனைவர்க்கும் எமது நன்றி.

1–12–1960

யாழ்-த. இ. மன்றம்


# "ஆசீர்" வெளியீடுகள்

**படிமுறைக் கணிதம்:**

| 2, | 3, | 4, | 5, | 6, | 7, | 8ம் வகுப்புகளுக்கு |
|---|---|---|---|---|---|---|
| 1.20 | 1.40 | 1.60 | 1.80 | 2.00 | 2.00 | 4.00 ரூபா |

**படிமுறை எண்கணிதப் பயிற்சி**

| மத்திய வகுப்பு, | உயர்தர வகுப்பு தமிழ், | ஆங்கிலம் | சிங்களம் |
|---|---|---|---|
| 1.60 | 1.60 | 1.60 | 1.60 |

**மாதிரிகை வினாப்பத்திரங்கள்:**

| 5. | J. S. C. | G. C. E. |
|---|---|---|
| -/50 | -.75. | 1.00 |

**படிமுறை அட்சர கணிதம்**

| 6, | 7, |
|---|---|
| 1.60 | (அச்சில்) |

**ஏனைய வெளியீடுகள்:**

இலக்கண விளக்கமும் பயிற்சியும் 4ம் 5ம் வகுப்பு, பயிலுந் தமிழ் முதலாம் பாகம், பாடக்குறிப்பும் பதிவும், இலங்கைப் பூமி சாத்திர வினாவிடைகள் முறையே 70, 80, 2.00, 2.00, 1.25

கிடைக்குமிடம்

## ஆசீர்வாதம் அச்சகம்-புத்தகசாலை,

32, கண்டிவீதி—யாழ்ப்பாணம்.

தொலைபேசி. 274

# ஈடு

உங்கள் வீட்டை ஈடுவைத்துக் கடன் வாங்கி விட்டு இப்பொழுது கஷ்டப்படுகிறீர்களா?

உங்கள் கஷ்டத்திற்கு விடிவு ஏற்பட்டு விட்டது. எங்கள் "இலங்கா நிதி" சலுகைத்திட்டத்தில் சேர்ந்து பயன் அடையுங்கள்.


சிறு துளி பெரு வெள்ளம் என்பதைப் போல் உங்கள் சேமிப்பு, வளர்ந்து வீட்டை மீட்பதுடன், உங்களையும் பெரும் செல்வந்தராக்கும்.

விபரங்களுக்கு எழுதுங்கள்
அல்லது
நேரில் வந்து சந்தியுங்கள்.

# இலங்கா நிதி லிமிட்டெட்

284, காங்கேசன் துறை வீதி : யாழ்ப்பாணம்.

தலைமை நிலையம் : திருநெல்வேலி.




சி. சிவகாமி, அம்பாந்தோட்டை.

கே: தங்கள் கண்களுக்குத் தெரியாதவை எவை?

ப: கடவுள், காற்று, என் திருமதியின் தலைமயிரின் உண்மையான நீளம்!

ஆனந்தன், "கமலாபதி" அரியாலை.

கே: இலங்கையில் வெளியாகும் தமிழ் மாதப் பத்திரிகைகள் எவை?

ப: ஆத்ம ஜோதி, சமூகத்தொண்டன், கலைச்செல்வி, கலைமதி, கதம்பம், விவேகி, தமிழின்பம், ஆனந்த சாகரம், வானம்பாடி, உன்னைப்பற்றி ஆகியவை. இலக்கியப் பத்திரிகைகளுள் காலத்தில் மூத்தது "கலைச்செல்வி" தான்!

ந. தவமணி, கோப்பாய்.

கே: எனது வாழ்க்கையில் பல கஷ்டங்கள் ஏற்பட்டு வருந்துகின்றேன். தற்கொலை செய்வதின்றி வேறு வழியில்லை. தற்கொலை செய்யவும் மனம் அஞ்சுகின்றது. என்ன செய்யலாம்?

ப: வாழ்வதற்கு மனத்திட்பம் வேண்டும். சாவதற்கு மனத்துணிவு வேண்டும். இவையிரண்டும் தங்களிடமில்லையே! கஷ்டங்களைக் கண்டு கலங்காது அவற்றை எதிர்த்துப் போராடவேண்டும். அரிச்சந்திரனுக்கும், நளனுக்கும், இராமருக்கும் பாண்டவருக்கும் ஏற்படாத கஷ்டமா தங்களுக்கு ஏற்பட்டுவிட்டது! 'பிற்போக்கு இலக்கியம்' என்று ஒதுக்காமல் அவர்களுடைய சரித்திரத்தைப் படித்தால் உங்கள் வாழ்க்கை நிச்சயம் மலர்ச்சியடையும்,

செ. சுந்தரலிங்கம், கட்டுவன், தெல்லிப்பளை.

கே: "இன்றைய அரசியல்" என்ற தலைப்பில் ஏன் கலைச்செல்வியில் ஒரு பகுதி இடம்பெறுவதில்லை?

ப: அந்தக் குட்டையைக் கலக்கி, மக்களின் மனத்தைக் குழப்ப, இலங்கையில் பல பத்திரிகைகள் இருக்கின்றனவே! அந்தக் கைங்கரியத்தில்

'கலைச்செல்வி'யும் ஈடுபட வேண்டுமோ?

இராஜகுமரன், கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

கே: நீங்கள் யாருடைய நூலை விரும்பிப் படிக்கின்றீர்கள்?

ப: தமிழ் நூல்கள் சம்பந்தப்பட்ட வரை, பலருடைய நூல்களை விரும்பிப் படிக்கின்றேன். தமிழ் நூற் கடலில் நீந்தி நான் கண்டெடுத்த முத்துக்கள் இவை: அன்பிற்கு அகிலன்; அறிவுக்கு அண்ணு; இலக்கியச் சுவைக்கு ஈழத்துப் பண்டிதமணி; வாழ்வு நெறிக்கு வரதராசன்; கதைக்குக் கல்கி; செந்தமிழிற்குச் சேதுப்பிள்ளை; பக்திக்கு ஜகந்நாதன்; வீரத்துக்கு ம. பொ. சி; நகைச்சுவைக்கு நாடோடி.

கே: யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் "விவேகி" பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: அதிக பக்கங்களுடன் விளம்பரங்களின்றி ஒழுங்காக வெளியாகும் பத்திரிகை "விவேகி". எழுத்துத் துறையில் அடியெடுத்து வைக்கும் இளைஞர்க்குச் சந்தர்ப்பம் கொடுக்கும் ஆசிரியரைப் பாராட்டவேண்டும். ஆனல் விஷயங்களின் இலக்கியத் தரத்தை ஆசிரியர் கவனிப்பதாகத் தெரியவில்லையே. 'பி. ஸ்ரீ' ஒரு நல்ல சிறுகதை எழுத்தாளர் என்று ஓரிதழில் குறிப்பிட்டுள்ளது. இது சரியா? பழைய பஞ்சாங்கம் போன்று வெளியாகும் 'விவேகியின், உருவ அமைப்பில் மாற்றம் செய்து, இப்பொழுது பிரபலமடைந்துள்ள ஒரு சில எழுத்தாளர்களின் படைப்புக்களையாவது தொடர்ந்து வெளியிட்டால் 'விவேகி' முன்னேறி விடும்!

ஆர். இராமநாதன், டிக்கோயா.

கே: உயிரற்ற பொருட்கள் காதல் செய்வதுண்டா?

ப: சார்கள் 'ஷெல்'லைக் காதலிக்கின்றனவாமே!

மு. பரமேஸ்வரன், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.

கே: சிற்பி, கோசுதா, நந்தி, ஈழத்துச்சோமு, சொக்கன் ஆகியோரின் உண்மையான பெயர்களைத் தரவும்?

ப: சரவணபவன், டி கொஸ்ரா, சிவஞானசுந்தரம், சோமகாந்தன், சொக்கலிங்கம்!

செல்வி, துரைரட்னம், கட்டப்பிராய் யாழ்ப்பாணம்.

கே: கடவுள் இருக்கிருரா?

ப: ஆம். கிறிஸ்தவக் கடவுள் இருக்கிருர். சைவக் கடவுள் தாண்டவமாடுகிருர்; வைஷ்ணவக் கடவுள் பள்ளி கொள்கிருர். சமணக் கடவுள் குதிரைச் சவாரி செய்கின்ருர்!

H. L. முஹிதீன் பாவா, மெயின் வீதி, ஏருவூர்.

கே: பிரதமர் சிறிமாவைப் பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?

ப. பெயருக்கேற்றபடி சிரித்துச் சிரித்துக் காரியம் பார்க்கும் மாது.

மு காளித்தம்பி, கற்கோவளம், பருத்தித்துறை.

கே: 'கலைச்செல்வி'யின் தங்கை 'கலைமதி'யாயின் இருவருடைய அன்னை யார்?

ப: என்றும் குன்ரு எழிலரசி எங்கள் தமிழன்னைதான்.

கே: சத்தியாக்கிரகம் அரசியலில் சக்தி வாய்ந்த கருவியா?

ப: இதயத்தில் தூய்மையையும் துணிவையும் சேர்த்து, நேர்மையையும் நம்பிக்கையையும் நிறுத்தி, நல்லதொரு இலட்சியத்திற்காக சத்தியாக்கிரகம் செய்தால், அதை

விடச் சக்திவாய்ந்த கருவி வேறெது வுமில்லை.

க. சொக்கலிங்கம். கிரிமெட்டியா, கலஹா.

கே: ஓய் பட்பட், நான் சந்திரமண்டலத்திற்குப் போகவேண்டும். பாஸ்போர்ட் வாங்கித் தருவீரா?

ப: ஏன் அவசரப்படுகின்றீர்? இத்தாலிய சோதிடரின் பேச்சை நம்பி, 'உலகம் அழியப் போகின்றதுதானே' என்று நினைத்து யாரிடமாவது கடன் வாங்கி 'சோக்குப்' பண்ணிவிட்டு இப்போது திண்டாடுகின்றீரோ?

எம். எச். எம். மன்சூர், முஸ்லிம் பாடசாலை, றக்குவானை.

கே: மனிதன் உயிருடன் இருக்கும் வரை விரும்புவது எதை?

ப: தன் உயிரைத்தான்! அதற்குப் பிறகுதான் பெற்றதாய், பிறந்த பொன்னாடு, பேசும் மொழி, ஆசை மனைவி அருமை மக்கள் என்பவையெல்லாம்

க. இரத்தினசிங்கம், கிளிநொச்சி.
கே: இலங்கை வானொலியில் தமிழ் நிகழ்ச்சி அதிகாரி கே. எஸ். நடராஜாவும் நாவற்குழியூர் நடராஜனும் ஒருவரா?

ப: ஒருவரேதான்! நாவற்குழியூர் நடராஜன் என்ற பெயரில் இவர் எழுதிய கவிதைகள், ஈழகேசரி, மறுமலர்ச்சி, திருச்சி கிராம ஊழியன் முதலிய பத்திரிகைகளில் இடம் பெற்றிருக்கின்றன. சிவாஜி ஆசிரியர் திருலோக சீதாராம் அவர்கள் தொகுத்த கவிதைத் தொகுதி ஒன்றில் இவரது கவிதையும் இடம் பெற்றுள்ளது. ' சிலம் பொலி" என்ற தனது கவிதைத் தொகுதி வெளியிடப்பட்டதையொட்டி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இலக்கிய நண்பர்கள் சந்திப்பில் "எழுத்துத் துறையில் நான் ஈடுபட்டிருந்தபடியாற்றான் இப்போதைய பதவியும் அந்தஸ்தும் எனக்குக் கிடைத்தன" என்று தன் எழுதுகோலுக்கும் எங்கள் தமிழன்னைக்கும் பெருமையுடன் நன்றி பாராட்டியிருக்கின்றார் இப் பட்டதாரிக் கவிஞர்!

கே: எஸ். எல். சவுந்தரநாயகம் ஏன் 'கலைச்செல்வி'யில் எழுதுவதில்லை?

ப: 'தகரவிளக்கு' என்ற நல்லதொரு கதையை ஒன்றரை ஆண்டுகட்கு முன் 'கலைச்செல்வி'யில் எழுதியிருக்கின்றாரே! அதற்குப்பிறகு அத்தகைய உயர்ந்த தரத்தில் அவரால் எதையும் படைக்க முடியவில்லைப் போலும்! ஏனென்றால் எழுத்தாளர்கள் தமது மிகச் சிறந்த சிருஷ்டிகளைத்தான் 'கலைச்செல்வி'க்கு அனுப்பி வைக்கின்றார்கள்.

பொ. நாகராசா, பிள்ளையார் கோவிலடி மாதகல்.

கே: நித்திரை வராமல் தடுப்பதற்கு உபயோகிக்கப்படும் மருந்தின் பெயரென்ன?

ப: "டெக்ஸிட்ரைன்" மாத்திரைகளை உபயோகித்தால் நித்திரை வராது. வைத்தியரின் ஆலோசனையுடனேயே இதை உபயோகிக்க வேண்டும்.

S. அஹமட்ஜுனைட், கடைத்தெரு ஏறாவூர்.

கே: இலங்கைப் பிரதமர் திருமதி பண்டாரநாயக்காவிற்குப் பிறகு யார் வருவார்?

ப: திரு. பண்டாரநாயகா பிரதமராயிருந்தபோது, அவருக்குப் பிறகு C. P. de சில்வாவோ, A. P. ஜெயசூரியாவோ பிரதமராக வருவார்கள் என்றுதானே பலர் எதிர்பார்த்தார்கள். கடைசியில் காலித் தகநாயக்காவிற்கு அடித்ததே அதிர்ஷ்டம்! இப்போது 'பீலிக்ஸ்' தான் அடுத்த பிரதமர் என்று பலர் கூறுகின்றார்கள். மின்னாமல் முழங்காமல் மழை

பெய்யும் இலங்கை அரசியல் வானில் என்னென்ன நடைபெறுமோ!

ம. தம்பியையா, காலிவீதி, பம்பலப்பிட்டி.

கே: பேராசையற்ற, தன்மான உணர்ச்சியுடைய இனம் எது?

ப: "பத்திரிகாசிரியர்" இனம்! எத்தனையோ பேர் விஷய 'தானம்' செய்ய முன்வருகின்றார்கள். அவர்களைத் துச்சமாகவும் மதிப்பதில்லையே பத்திரிகாசிரியர்கள்!

கே: தங்களுக்குக் கணக்கு ஓடுமா?

ப: ஓடாது. என்னைக் காத தூரம் ஓட்டும்!

சே. சிவராஜா, நீராவியடி யாழ்ப்பாணம்.

கே: 'பகீரதன்' ஈழநாட்டு எழுத்தாளர்கள் பற்றிக் கூறியதையிட்டுத் தாங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?

ப: இலங்கை எழுத்தாளர்கள் "கட்டப் பொம்மன்"கள். பகீரதன் ஒரு தமிழ்வாணன். அவர் எந்தக் கலைப் பாலத்தையோ கட்டியெழுப்புவதற்காக இங்கு வரவில்லை. இலங்கையிலுள்ள "கங்கை" விற்பனையாளர்கள் முடக்கவிருந்த ஆறுயிரத்துச் சொச்ச ரூபாவை வசூல் பண்ணத்தான் வந்தார். இங்கே 'கங்கை'யின் விற்பனை திருப்தியாயில்லை. பணத்தைச் செலவு செய்து விளம்பரம் செய்யவும் விருப்பமில்லை. ஆகவே தான் இந்த நவீன விளம்பர பாணியைக் கையாண்டார். இப்போது இலங்கையின் எப்பகுதியிலும் 'பகீரதன்—கங்கை'யை அறியாதவர் எவருமில்லை. அடுத்த "கங்கை" இதழ் இங்கு வந்த இரண்டொரு தினங்களில் விற்றுப்போகின்றதா, இல்லையா, பாருங்கள்!

T. P. நாகராஜன், "கனகராணி" மாதகல்.

கே: உடுவில் தொகுதியில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த திரு. வ. பொன்னம்பலம் அவர்களின் விலாசம் என்ன? கம்யூனிஸ்ட் ஆதரவாளன் நான்; அவருடன் தொடர்பு கொள்ள விரும்புகின்றேன்.

ப: அவர் இப்போது கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் ஆசிரியராயிருக்கின்றார். வீட்டு முகவரி: அளவெட்டி. கம்யூனிஸ்ட் ஆதரவாளனாகிய தங்களுக்கு அவரின் விலாசம் தெரியாமலிருப்பது வேடிக்கையாக இல்லையா?

"நந்தினி" யாழ்ப்பாணம்.

கே: என் கைரேகைப் படத்தை அனுப்பியுள்ளேன். நான் டாக்டராக வரமுடியுமா?

ப: தங்களிடம் தன்னம்பிக்கை இல்லை. மருத்துவத்துறை அல்லது விஞ்ஞானத்துறையில் தாங்கள் பிரகாசிக்கலாம் கால பலனிலும் பார்க்க. விடா முயற்சிதான் தங்களை முன்னுக்குக் கொண்டுவரும்.

ப. கமலேஸ்வரி, காலிவீதி, மவுண்ட் லவினியா.

கே: என் கைரேகையைப் பார்த்துப் பலன் கூறுங்கள்?

ப: சந்தர்ப்பத்திற்குத் தக்கபடி நடக்கும் புத்திசாலி. சுற்றத்தாரிலும் பார்க்க, பிறர் உதவி அதிகம். பிறந்த வீட்டில் வாழமுடியாது. தயார் இருந்தால், நோயாளியாகவே இருப்பார். 23 வயதிற்குமேல் இடமாற்றமும் முன்னேற்றமும் காணப்படுகின்றன.

த. தர்மசோதி, மார்ட்டின் வீதி, யாழ்ப்பாணம்.

கே: என் கை ரேகைகளைப் பார்த்துப் பலன் எழுதுங்கள் பார்க்கலாம்?

ப: நன்ருகப் படித்து முன்னுக்கு வரலாம். சினேகிதிகளின் தொடர்பைக் குறைத்துக் கொள்ள வேண்டும். அல்லாவிடில் சஞ்சலம் ஏற்படும். விஞ்ஞானத் துறையில் முன்னேற்றம் காணலாம்.

ச. பிரதிபா. ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.

கே: என் கைரேகைகளுக்குரிய பலன்களைக் கூறுவீர்களா?

ப: இரக்கமும். முற்போக்குமுடைய இதயம். பிறந்த மனையில் இருக்க முடியாது. 23 வயதின் மேல் விவாகம் செய்தால் நல்லது. தலையிடி கபாலக்குத்து முதலிய நோய்கள் உண்டு. 18-20 வயதில் கை காலில் காயம் ஏற்படலாம்.

S. யோகராசா, உடுவில் சுன்ஞகம்.

கே: என் கை ரேகைகளைப் பார்த்து என்னைப்பற்றிக் கூறுவீர்களா?

ப: தன்னலமற்ற குணம். திடகாத்திர இதயம். கோபம் விரைவில் வரும். பொதுசனத்தோடு சம்பந்தப்பட்ட தொழிலில் ஈடு பட்டால் நல்லது.

இ. திருநாவுக்கரசு, இமையாணன், உடுப்பிட்டி.

கே; அழகில்லாத ஆடவரை அழகு நங்கையர் காதலிப்பதுண்டா?

ப: சினிமாவிலும் நாடகத்திலும் தான் காதலன் மன்மதனுக இருப்பான்; காதலி ரதியாக இருப்பாள். நிஜ வாழ்வில் அப்படியில்லை. அழகற்ற பெர்னுட் ஷாவை ஒரு பேரழகி காதலிக்கவில்லையா? சில காரணங்களினுல் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பமும், சிலரிடமுள்ள திறமைகளுந்தான் காதல் தோன்றுவதற்கு அடிப்படைக்காரணமாகவுள்ளன.

ம. இரத்தினசபாபதி: வண்ணுர் பண்ணை.

கே: பராளுமன்றத்தின் பிரதிநிதிகள் அனைவரும பெண்களாய் இருந்தால்....?

ப: பத்திரிகையாசிரியர்கள் கவிஞர்களாக மாறிவிடுவார்கள். அங்குள்ள சிற்றுண்டிச்சாலை 'மேக்-அப்' அறையாக மாறும்.

கே. சௌந்தரராஜன், புரசைவாக்கம், சென்னை.

கே: தங்கள் நாட்டு அரசாங்கம் முதலாளித்துவ அரசாங்கமா?

ப: ஆம். அரசியலின் 'ஸோல்' ஏஜண்டுகளாகப் பல காலம் 'சேனநாயக்கா அன்ட் சன்ஸ்' ஸினர் இருந்தார்கள். இப்போது பண்டார நாயக்கா அன்ட் பிரதர்ஸ்' கைக்கு மாறியிருக்கின்றது. இந்த முதலாளிகளின் கையிலிருந்து 'பெரேரா அன்ட் கோ' விற்கோ, 'நாயகம் (பிரைவேட்) லிமிட்டெட்' டினருக்கோ செல்லும் காலமும் விரைவில் வரலாம்!

செல்வி' பூர்ணிமா, ஐதுறூஸ் மகாம் வீதி யாழ்ப்பாணம்.

கே: "ஒட்டை வாயனி"ன் உண்மைப் பெயர் என்ன? அவர் தினகரன் பத்திரிகையிற் கடமையாற்றுகிருரா?

ப: உஸ்!

"குஞ்சு", மானிப்பாய்.

கே: தங்கள் திருமதிக்கு யாராவது பகைவர்கள் இருக்கிருர்களா?

எங்கள் வீட்டிலுள்ள பெரிய நிலைக் கண்ணுடி அவளின் முதல் எதிரி!

கே: உங்களுக்குப் பாட்டு வருமா?

ப: வரும். அதோடுகூட ''கண்டேன் கண்டேன்'' என்று சொல்லிக் கொண்டு வேறொருவரும் வருவார்!

ம. இராமமூர்த்தி, ஸ்கின்னர் ரோடு. கொழும்பு.

கே: இலங்கையிலுள்ள எழுத்தாளர்களை எத்தனை வகையாகப் பிரிக்கலாம்?

ப: நான்கு, ஐந்து ஆண்டுகட்கு ஒரு தடவை எழுதும் யானை எழுத்தாளர்கள், அடிக்கடி எழுதி எழுதிக் குவித்துவரும் பன்றி எழுத்தாளர்கள் ஒன்றையே திருப்பித் திருப்பிச் சொல்லும் கிளிப்பிள்ளை எழுத்தாளர்கள், விமர்சனம் என்ற பெயரில் மற்றவர்க்குப் போதிக்க முன்வரும் பல்லி எழுத்தாளர்கள், மற்றையோரின் கருத்துக்குச் சிறிதும் மதிப்புக் கொடுக்காத எருமை எழுத்தாளர்கள் உருப்படியாக எதையும் எழுதாமல், ''நான்தான் எழுத்தாளன்'' என்று கத்தித் தொலைக்கும் தவளை எழுத்தாளர்கள் என ஆறு பிரிவுகளாகப் பிரிக்கலாம்!

கே: இலங்கையில் அதிக அளவில் விற்பனையாகும் இந்திய வாரப்பத்திரிகை எது?

ப: கல்கி. 13000 பிரதிகள் வாரத்தில் விற்பனையாகின்றன.

க: இராசரத்தினம், அச்சுவேலி.

கே: சீயத்திலிருந்து வந்து ''சீயக்காய்'' ஆகி
''சீயாக்காய்''என நீண்டு சில காலம் நின்று
சிகை தனக்குத் தேய்ப்பதனுல் ''சிகைக்காயெ''ன்றுனல்
சிகை தனக்குத் தேய்ப்பதெல்லாம் சிகைக்காய்கள் ஆமோ?

ப: நாவிலே வல்லவர்கள் நாவலர்கள் ஆனுலும்
நாவலர் என்றவுடன் நல்லூரார் தோன்றுகின்றுர்
பாரதி என்ற பெயர் பலருக்கிருந்தாலும்
பாரதி என்று நாம் ஒருவரையே குறிக்கின்றேம்.
சிகையிலே தேய்ப்பதற்குப் பல காய்கள் இருந்தாலும்
சீயத்திலிருந்து வந்த சீயக்காய் தான் சிகைக்காய்!

---



# ஆசையும் பாசமும்

'சாந்தினி'

ஏர்க்காலை அழுத்திப் பிடித்திருந்த வலது கை மரத்து விட்டது போன்ற உணர்ச்சி. சின்னப்பு வலது கையைச் சிறிது நெகிழ விட்டவாறு, இடது கையால் ஏர்க்காலை இறுகப் பற்றிக் கொண்டான்.

ரிக்ஷா வண்டி உருண்டோடிக் கொண்டிருந்தது.

வீதியின் அருகிலிருந்த பிள்ளையார் கோயிலைக் கடந்து, வளைந்து செல்லும் திருப்பத்தின் வழியாக அவன் ரிக்ஷாவை இழுத்துச் சென்ருன். அதன் நீண்ட நிழல் பாதையோரத்துக் கிழக்கு வேலியின் மேல் பாகத்தைத் தொட்டு விளையாடிக் கொண்டு தொடர்ந்தது.

பாதை இன்னமும் முடிந்த பாடாகக் காணவில்லை. அநுமார் வால்போல் அது நீண்டு, நீண்டு கொண்டே போய்...

பல மாரிகளையும் கோடைகளையும் கண்டு விட்ட வரட்டுப் பெருமிதத்தைத் தன்னுள் அடக்கிக் கொண்ட மக்கி ரோட்டு மேடும்பள்ளமுமாக இருந்தது. அங்கொன்றும் இங்கொன்றுமாகக் காட்சிதரும் அந்த ரோட்டின் மேடு பள்ளங்களில் ரிக்ஷாவின் சில்லுகள் ஏறி இறங்கி விழுந்து எழுந்தன. விழுந்து எழும்போது தாளலயத்துடன் அவை சத்தமிட்டு, அந்த வீதியின் மௌனத்தைத் தங்களால் இயன்றவரை விரட்டியடித்துக் கொண்டிருந்தன.

முகத்தில் வியர்வைத் துளிகள் அரும்பின.

தலையில் கட்டிய அழுக்கேறிய முண்டாசுத் துணியால் துடைக்க நினைத்து, ஏர்க்காலைத் தரையில் வைத்தான் சின்னப்பு. முண்டாசை அவிழ்த்தெடுத்து முகத்தை நன்ருக அழுத்தித் துடைத்தபோது ஓர் ஆழ்ந்த பெருமூச்சு அவனது அடி நெஞ்சிலிருந்து வெளிப்பட்டது. அந்த நேரத்திற்குள் தன்னைச் சிறிது ஆஸ்வாசப் படுத்திக் கொண்டு, மீண்டும் குனிந்து ஏர்க்காலைத் தொட்டு நிமிர்த்தி, பழக்கப்பட்ட நிலைக்குக் கொண்டுவந்தபோது...

சிந்தனை, கால்களுக்கு விலங்கிட்டு விடவில்லை. அது ரிக்ஷா வண்டியின் சில்லைப்போல உருண்டு கொண்டிருந்தது.

சீ! என்ன நாய்ப் பிழைப்பு? காலமை விடிஞ்சும் விடியாமலுமாய் றிக்சோவைத் தொட்டு இழுக்கிறன். இந்தா பொழுது கருகிப் போச்சு, கண்டதென்ன மிச்சம்? முக்கா ரூபா — இப்படியே என்ரை நாள் போனு? நாளைக்கு பாயிலை படுக்கையில் விழுந்தா — பொடிச்சி பிள்ளை பூமணியின்ரை கதி? அதை நாளைக்கு நடுத்தெருவிலை விட்டிட்டு கண்ணைக் கிண்ணை மூடிட்டா?

பெரிய பள்ளத்தில் வண்டிச் சில்லொன்று விழுந்து எழுந்த அதிர்ச்சி அவனை நிதர்சன உலகத்திற்குக் கொண்டு வந்தது. எதிர்காலத்தைப் பற்றிய சிந்தனைக் கோர்வை 'பட்' டென்று அறுபட்டது.

நிமிர்ந்து பார்த்தான்.

வீட்டிற்குப் போகும் குறுக்கு ஒழுங்கை கிட்டிவிட்டது.

உதட்டில் அர்த்தமற்ற வெறும் சப்த ஒலிகள் முணுமுணுப்பாக ஒலிக்க, சின்னப்பு ஒழுங்கை முடக்கில் வண்டியைத் திருப்பினுன்.

வண்டியின் மேற் கூடாரம் வேலி யோரத்துப் பூவரசங் கிளையில் மாட்டிக் கொண்டு விட்டது. மன எரிச்சலை நெஞ்சு ஆழத்தில் அடக்கி அழுத்திய வண்ணம், ரிக்ஷாவை ஒரு தடவை பின்னுக் கெடுத்து வெட்டி, வளைந்து சடக்கென்று முன்னுல் இழுத்தான்.

பூவரசங்கிளை வண்டியிலிருந்து விடுபட்டு விட்டது. ரிக்ஷா ஒழுங்கையில் இறங்கி ஆடி அசைந்து சென்றது.

பனை மரக் கூடல்களுக்குள் ஒரு சில பனையோலைக் குடிசைகள் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் காட்சியளித்தன.

நீரை ஊடறுத்துச் செல்லும் மீனைப்போல பனங்கூடலை ஊடறுத்துச் சென்று, ஒரு சில குடிசைகளைக் கடந்து ஒரு குடிசையின் திறந்த வெளி முன் முற்றத்தில் ரிக்ஷாவை நிறுத்தினுன் சின்னப்பு

குடிசையின் வாயிலைக் குனிந்து பார்த்து உள்ளே நோட்டம் விட்ட சின்னப்பு, அங்கே ஆளரவம் இல்லாததைக் கண்டு, மீண்டும் முற்றத்துக்கு வந்தான்.

'அன்னம்மா! ஏய் அன்னம்மா...!'

பதில் இல்லை.

மீண்டும் தொடர்ந்தாற்போலக் குரல் கொடுத்தான் சின்னப்பு.

"அன்னம்மா!...எடீ அன்னம்மா!"

"ஓய்! இருங்கோ இந்தா வாறன்!" பின் புறத்தில் பனை வடலிகள் நிறைந்த அடிவளவிற்குள் இருந்து அன்னம்மாவின் குரல் கேட்டது.

பக்கத்துத் தோட்டத்து வளவுக் காணியைப் பிரிக்கும் எல்லைக் கிணற்றில் அன்னம்மா தண்ணீர் அள்ளிக் கொண்டிருந்தாள்.

அவளின் வருகையை எதிர் பார்த்து சின்னப்பு திண்ணை மண் குந்தில் குந்திக் காவல் இருந்தான்.

நீர் நிரம்பிய மண்குடத்தின் அழுத்தத்தால் இடை துவள, இடது கை வீசி நடந்து வந்து கொண்டிருந்தாள் அன்னம்மா. குடம் மேலும் கீழும் ஆடி ஆடி நீர் தழும்பி முந்தானை தண்ணீரால் நனைய, சீலையை முழங்கால் வரைக்கும் சிரைத்துப் பிடித்த வண்ணம் அவள் அவசர நடை போட்டு எட்டி நடந்து வந்தாள்.

'அவரை' அதிக நேரம் தாமதிக்க வைத்து விட்டனே?' என்று அடிமனதில் ஏகப் பரபரப்பு.

"இந்தா, அன்னம்மா, பிள்ளை எங்கே? வீட்டை வந்தால் உன்னைக் காணவில்லை. அவளையும் எங்கையும் காணவில்லை! எங்கை துலைஞ்சிட்டாள் அவள்?"

விசாரிப்பின் தொனி விசித்திரமானதாக இருந்தாலும் அன்பின் தனித் தன்மை அந்த வார்த்தைகளின் பின்னுல் மறைந்து ஒலித்தது.

"அதையேன் கேட்கிருய் போ, பின்னேரம் பள்ளியாலை வந்தது தான் தாமதம்! 'ஆச்சி இஞ்சை' இருந்து என்னுலை படிக்க ஏலாது. உன்னுலை வேறை கரைச்சல். நான் புளியடி வளவுக்கை போயிருந்து நல்லாய் படிச்சிட்டு பொழுது படேக்கை திரும்பி வாறன், எண்டு சொல்லிப்போட்டு போச்சுது. பாரன் முளைச்சு மூண்டு இலை விடுகிறதுக்கு முந்தி இந்த பொடிச்சிக்கு..."

தாய்மைப் பெருமையுடன் மன

திற்குள் மகளினுடைய இந்த திடீர் ஞானோதயத்தை நினைத்து நினைத்துப் பூரித்த மன நிறைவுடன், சொல்லிக் கொண்டு வந்த வார்த்தைகளை முடிக்காமலே குட்த்தை முற்றத்தின் ஓரமாகவுள்ள கறி முருங்கை மரத்தினடியில் இறக்கி வைத்து விட்டு நிமிர்ந்தாள், அன்னம்மா.

பூமணி தப்பித்தவறி அந்த குடிசையில் பிறந்து விட்ட செந்தாமரை, ஆறுவயதான அந்தச் சிறுமியின் நெஞ்சத்தில் தான் எத்தனையாயிரம் கனவுகள்! கற்பனைகள்! அப்பப்பா!

வாய் திறந்து அவள் கேட்கும் மழலைக் கேள்விகளின் அர்த்தம் தெரியாமல் சின்னப்புவும் அன்னம்மாவும் தவிக்கும் தவிப்பைப் பார்த்துப் பூமணி கை கொட்டிச் சிரிக்கும் அந்த அழகொன்று இருக்கிறதே—

வார்த்தைகளில் அது அடங்காதது!

அசாதாரண சூடிகையும் புத்தி நுட்பமும் கொண்ட பூமணியை— தனது மகளென்று எண்ணிக் கொள்வதில் தன்னையறியாமலே தனக்குள் ஒருவகைப் பரம திருப்தி- பெருமிதம்-சின்னப்புவின் நெஞ்சத்தில்.

"ம்...ம்...நல்லாய்ப் படிக்கட்டும் நீ அவளையொண்டும் குளப்பாதை. அதுசரி. அடுப்பிலை ஏதாவது கோப்பி கீப்பி கிடக்கா? கிடந்தால் கொஞ்சம் கொண்டா. காலமை தொடங்கி மூக்காலை சளிவழியுது எனக்கு, ராத்திரிக்கு ஒண்டும் வேண்டாம்,"

"கோப்பி கொஞ்ச நேரத்திலை வச்சுத்தாறன். முதலிலே சுடுதண்ணி கொண்டாறன், வடிவா ஒரு தரம் முகத்தை கழுவுங்கோ." என்ன கொண்டரட்டா?"

"ம்...ம்...சரி...சரிகொண்டா."

கோப்பித் தண்ணியைக் குடித்து விட்டு தேக உளைச்சலில் பிள்ளையின் முகத்தையே பார்க்காது படுத்தவன் காலையிலைதான் எழுந்திருந்தான்.

விடிந்ததும் சோற்றுப் பானைக்குள் இருந்த பழஞ்சோற்றைப் பிழிந்து குழம்புச் சட்டிக்குள் போட்டு பிசைந்து பிடிபிடியாக அள்ளிச் சாப்பிட்டு விட்டு கொன்வென்றுக்குப் போக ஆயத்தமானாள் பூமணி.

சின்னப்புவும் 'தொழி'லுக்கு வெளிக்கிட்டுவிட்டான். ரிக்ஷா வண்டியின் ஏர்க்காலைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டாள். துண்டு முண்டாசாகத் தலைக்கு ஏறியது.

"அப்பு..."

சின்னப்பு திரும்பிப் பார்த்தான்.

என்றுமில்லாத திரு நாளாக பூமணி [illegible] குழைந்து நெளிந்து எதையோ சொல்லத் துடிதுடித்தபடி நின்று கொண்டிருந்தாள்.

"என்னடி?"

பாசம் நெஞ்சாழத்தில் அடி மண்டிக்கிடந்தாலும், 'குட்டி நாய்க்கும் குழந்தைப் பிள்ளைக்கும் இடம் கொடுக்கக் கூடாது' என்ற கொள்கையுள்ளவன் சின்னப்பு. அதனால் பாசத்தை மனத்திற்குள்ளேயே அமுக்கிவிட்ட வண்ணம் "என்னடி? என்ன வேணும்?" என்று குரலில் கடு கடுப்பை ஏற்றிக் கொண்டு கேட்டான்.

"இல்லை அப்பு...ஒண்டு கேக்கட்டா?" கைதவறி கீழே விழுந்த பென்சிலைக் குனிந்து எடுத்துக் கொண்டே கேட்டாள்.

சின்னப்புவுக்கு அதிசயமாக இருந்தது, பூமணியின் அன்றைய செயல்கள். அவனுக்குப் புதுமையாகவும் இருந்தது. மற்றைய நாட்களில் கையில் புத்தகம் ஏறவேண்டியது தான் ஒரே ஓட்டமாக ஓடுவாள் பள்ளிக்கூடத்திற்கு.

இன்று?

"என்னடி வேணும்? சொல்லு, ஏன் வெட்கப்படுகிருய்?" பல மாதங்களாகவே உள்ளத்தில் குமுறிக் கொண்டிருந்த ஒரு சிறிய ஆசையை மனம் விட்டுச் சொல்வதற்கே பூமணி தயங்கினுள். இப்பொழுது பிடி கொடுத்து விட்டாள். இனிச் சொல்லித்தானே ஆகவேண்டும்.

"இல்லை அப்பு...வந்து...வந்து பள்ளிக்கு வாற எல்லோரும்...கமலா, மீனு, அந்தப்பெரிய தெருவில இருக்கிற மாலா...எல்லாரும் காறிலை வரினம்..."

"அதுக்கு உனக்கென்ன?"

"கன பேர் றிச்சோவிலையும் வரினம் அப்பு...ம்..." வார்த்தைகளை மென்று விழுங்கிக் கொண்டே தொடர்ந்தாள். அவள் முகத்தில் வியர்வைத் துளிகள் அரும்பத் தொடங்கின.

"அப்பு இன்டைக்கு ஒருக்கா என்னைப் பள்ளிக்கு றிச்சோவிலை கூட்டிக் கொண்டு போறியா?" கேட்டுவிட்டு அதன் எதிரொலியாக அடி கிடைத்து விடுமோ என்ற தவிப்பில் தகப்பனின் முகத்தை பயப்பார்வையுடன் அண்ணந்து பார்த்தாள் பூமணி.

"அடி சக்கை எண்டானும். துரையின்ரை மேள் றிச்சோவிலை யெல்லோ போகப் போருளாம்... எடை ஆத்தை!" திரும்பி குசினியைப் பார்த்துக் கொண்டு குரல் கொடுத்தான் சின்னப்பு "இந்தா அன்னம்மா! கேட்டியே சேதியை? உன்ரை மேள் றிச்சோவிலையெல்லே பள்ளிக்குப் போகப்போருவாம். இஞ்சை வந்துபாரன் இந்தக் கூத்தை!"

அன்னம்மா சட்டென்று அங்கு வராதது அவள் அங்கில்லை அடிவளவிற்குள் போய் விட்டாள் என்கிற ஊகிப்பை அவனுள் ஏற்படுத்தியது.

கிண்டல் வார்த்தைக் கணைகளால் அடிபட்ட பூமணி மெல்ல நழுவி நகரத் தொடங்கினுள்,

"றிச்சோக்காரன் பிள்ளைக்கு துரைசாணிகளின் ஆசைகள் ...பள்ளிக்கு அனுப்பிறதுதான் பிசகு போலைத் தெரியுது".

தனது ஆசை நிராசையாகப் போய்விட்டதை உணர்ந்து, முகத்தில் பழைய கலகலப்பு மங்கி-மாற, சிலேட்டையும் புத்தகங்களையும்இடது கையால் இறுக்கிப் பிடித்தபடி ஓடினுள் பூமணி.

பூமணி போய்விட்டாள்.

அவள் தலை மறைந்ததும் சின்னப்புவும் நடையைக் கட்டினுன்.

அவன் அடிமனம் குறுகுறுத்தது. சந்தர்ப்பத்தை யொட்டி விழித்துக் கொண்டது.

'சே! நல்லா யோசிச்சுப் பார்த்தா, பாவம் குழந்தை. அதின்ரை மனசை வீணுய்க் குழப்பிட்டேன். அப்படி என்ன கேக்காததைக் கேட்டிட்டுது. நான் நாயைப்போல வள்ளென்று விழ? அதுக்கென்ன தெரியும் பாவம்! மடத்தனமா அதின்ரை மனசு நோகும்படி பேசிப்போட்டேன்."

மன உறுத்தல் என்பது கருக் கரிவாளைப் போன்றது. அது சின்

னப்புவின் மனதை அணு அணு வாக அறுத்துக் கொண்டிருந்தது.

வண்டியை அவசர அவசர மாக இழுத்துக் கொண்டு பரபரப் புடன் நடந்து, ஒழுங்கை முடக் கைக் கடந்து அவன் தனது ரிக் ஷாவைத் திருப்பும் பொழுது—

கையில் இலந்தைப் பழத் துடன் பூமணியும் ஒழுங்கை முடக் கில் திரும்பி நடந்து கொண்டி ருந்தாள்.

மனதில் ஓர் ஆறுதல்.

'இந்தா பிள்ளை இந்தா நில்லு!'

பூமணி திரும்பிப் பார்த்துவிட்டு நடையைக் கட்டுப் படுத்தினுள்.

சின்னப்பு வண்டியை கொண்டு சென்று அவள் அருகே நிறுத்தி ஞன்.

பூமணி நடப்பது என்ன என்று நிதானிக்கத் திராணியில்லாமல் பேந் தப் பேந்த விழித்தபடி நின்றுள். பயம் முற்றுக விடுபடவில்லை.

'ஏறு றிச்சோவிலே. நான் பள்ளி யடியாலை தான் போறன், உம்.. ஏறு!'

தன் மன நெகிழ்வை அவள் அடையாளம் கண்டு கொள்ளக் கூடாது என்ற வரட்டு உணர்ச்சி யினுல், வார்த்தைகளால் தன் உள் ளத்து நெகிழ்ச்சியை மூடி மறைத்து விட்ட பெருமிதத்துடன் பூமணியை அவன் பார்த்தான்.

அவளைத் தூக்கி ரிக்ஷாவில் ஏற்றுவதற்காக கைகளை நீட்டிய வண்ணம் முன்னுல் சென்றுன் சின்னப்பு

பூமணியின் கண்களில் புதிய ஒளி.

தகப்பனின் நீட்டிய கைகளைப் பற்றிய வாறே அந்த பிஞ்சுள்ளம் வாய் திறந்தது.

"வேண்டாமப்பு நான் நடந்து போறன். என்னைப் பெத்த அப்பு நீங்க. என்னை ரிச்சோவிலை இழுக்க லாமா?"

பூமணியின் மழலை வார்த்தை கள் சின்னப்புவின் இதயத்தைக் கலக்கி விட்டன. பாச உணர்ச்சி உந்த மகளைக் கட்டி அணைத்து முத்தமிட்டான்.

பூமணி வியப்புடன் தந்தையின் முகத்தைக் கூர்ந்து பார்த்தாள். அவன் கண்கள் கண்ணீரால் நிறைந்திருந்தன.

---

கொழும்பு நகர் முழுவதற்கும் நமது விற்பனையாளர்கள்:

**தென்னவன் நூலகம்,**

151, செட்டியார் தெரு,

**கொழும்பு-11**

# தேசீய தொழில் நிறுவனம்.

பொருளாதார வளர்ச்சி—இதுதான்ஒரு நாட்டின் சேமிப்புக்கு உயிர்நாடியும் முதற்படியும் கூட. இதுதான் தமிழ பேசும் இனத்துக்கு இன்று பெருந் தலையிடியைக் கொடுக்கும் முக்கிய பிரச்சினை. இதுதான் இன்றைய தமிழினத்துக்கு மிக, மிக அவசியமான பிரச்சினையும் கூட.

"தமிழர்களிடம்-தமிழ் பேசும் மக்கள் வாழும் பகுதிகளில்-பொருள்வளம் எங்கேயிருக்கிறது. பெரும்பான்மை இனத்தவருடன் இணங்கி வாழாமல், வடக்கு கிழக்குப் பகுதிகளில் முடங்கி வாழும் மக்கள் எவ்வாறு பொருளாதார வளர்ச்சி பெறப் போகிறார்கள்" என்றெல்லாம் நமது தலைவர்களுட் சிலர் அடிக்கடி முழங்குகிறார்கள்.

இதில் ஓரளவுக்கு உண்மை இருக்கிறதாயினும் அத்தகைய பொருளாதார வளர்ச்சிக்குறைவை நிறைவாக்கும் பணியில் அவர்கள் ஈடுபடுவதுமில்லை, ஈடுபடுவதற்கு உதவி புரிவதுமில்லை. ஆயினும் யாராவது அந்த வழியில் செயல்படத் தொடங்கினால், அவர்களைக் குறித்து, தமது 'கட்டிய வீட்டுக்குப் பழுது சொல்லும்' அனுபவத்தின் வழிவந்த, விமரிசனத்தைக் கூறமட்டும் தயங்குவதில்லை.

இதற்குக் காரணம் என்ன? ஊன்றியோசித்துப் பார்த்தால் தமிழ் மக்களிடம் குடிகொண்டுள்ள தாழ்வு மனப்பான்மையைத் தான் இதற்குக் காரணமாகச் சொல்லலாம். போர்த்துக்கீசர் ஆட்சி தொடங்கிய காலம் முதல் பரம்பரை பரம்பரையாகத் தமிழ் மக்களிடம் ஊறிப்போயிருக்கும் அடிமைப்புத்தி இலேசில் அற்றுப்போகுமா? இதனால் தான் அவர்களிடம் தன் நம்பிக்கை குறைந்து விட்டது, தாழ்வு மனப்பான்மை நிறைந்துவிட்டது.

இத்தகைய இக்கட்டான சூழ்நிலையில் யாழ்ப்பாணத்திலுள்ள தமிழர் பலர் சேர்ந்து, யாழ்ப்பாணத்திலேயே தலைமை அலுவலகத்தைக் கொண்டதாக, 'இன்ரநாஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிட்டெட்' என்ற பெயருடன் ஒரு நிறுவனத்தை நிறுவியிருப்பது தமிழ் மக்களுக்கெல்லாம் மகிழ்ச்சி அளிக்கக்கூடிய செயலாகும்.

'இன்சூரன்ஸ் தொழில் வெள்ளைக்காரனுக்குத்தான் உரியது. தமிழனுக்கு அது ஒத்துவராது, அவனுக்கு அதனைப்பற்றி என்ன தெரியும்?! என்ற குரல்கள் தன் நம்பிக்கைக் குறைவாலோ அன்றி சுயநன்மை கருதியோ அடிக்கடி கேட்கின்றன. இத்தகைய தாழ்வு மனப்பான்மையின் காரணமாக, வெளிநாட்டுப்பணம் சிறப்பாகத் தமிழ் பேசும் மக்களது பணம்-பெருந்தொகையாகப் போய்ச் சேர்ந்துவிட்டது, இப்பொழுதும் போகின்றது, இனி மேலும் போகப்போகிறது.

இந்த நிலை எதிர் காலத்திலேனும் ஏற்படாமல் தடுப்பதற்கும் எமது நாட்டுச் செல்வத்தை எமது நாட்டிலேயே, தமிழ் பேசும் மக்கள் வாழும் பகுதிகளிலேயே, உபயோகமுள்ள வழிகளில் பயன் படுத்திப் பொருள் வளத்தைப் பெருக்குவதற்குமாகத் திட்டமிட்டுத்தான் இந்த 'இன்ரநாஷனல் இன்சூரன்ஸ் கம்பெனியை ஆரம்பித்திருக்கிறார்கள்.

இது ஒரு பெரிய கம்பெனியா? இது சமீப காலத்தில்தானே ஆரம்பிக்கப்பட்டது? இதை எவ்வாறு நம்பிச் சேரலாம் என்றெல்லாம் சிலர் கேட்கிறார்கள் அப்படிக் கேட்பவர்களுக்குச் சரியான பதில் இது தான், "குழந்தை பிறக்கும் பொழுதே நிபுணனாகப் பிறப்பதில்லை, சூழ்நிலைகளையும் அவனது வளர்ச்சியில் அக்கறை காட்டுபவர்களையும் பொறுத்தே அவனது எதிர்காலப் போக்கு அமையும்.'

இந்த நிறுவனம் பரந்த அடிப்படையில் விரிவான பல திட்டங்களை நடத்தும் நோக்கத்தைக் கொண்டுள்ளது.

இது 1957 ம் ஆண்டு மாசி மீ இயங்கத் தொடங்கியது ஆரம்பத்தில தலைமை அலுவலகம் மட்டுமே இயங்கிவந்து. காலஞ் செல்லச் செல்ல கிளை அலுவலகங்கள் பல முக்கிய நகரங்களில் திறக்கப்பட்டன. இப்போது எல்லா அலுவலகங்களும் முழு ஊக்கத்துடன் நடைபெற்று வருகின்றன. தொழிலும் கணிசமான அளவு முன்னேற்றமடைந்து வருகின்றது.

இப்பொழுது இந்த நிறுவனத்தில் ஆயுள், மோட்டார், கப்பல், நெருப்பு முதலிய இன்சூரன்ஸ் தொழில்களும் விவாக, அந்தியகால சேமலாப நிதிகளும், குறித்தகால சேமிப்புத் திட்டங்களும் நடைமுறையில் இருந்து வருகின்றன.

ஆயுள் இன்சூரன்சில் பல்வேறு இன நிபந்தங் (Policy) களும் பல பிரத்தியேக சலுகைகளுடன் வழங்கப்படுன்றன.

உலகத்தில் எந்த இன்சூரன்ஸ் கம்பனிகளுமே நடத்த முன் வராததும் குறைந்த வருமான முள்ளவர்களுக்கு கூடிய வசதியை அளிப்பதும், சங்கங்கள் நடத்துவதுபோல் விவாக மரணக் கட்டணம வசூலிக்காததுமான 'விவாக அந்தியகாலச் சேமலாபநிதிகளைப் பொது மக்களுக்கு வழங்கியதில் இக்கம்பெனி நிச்சயம் பெருமைப்படலாம்.

குறித்தகாலச் சேமிப்புத்திட்டங்களில் மாதத்தவணைச் சேமிப்பு நிதியும் (Monthly Reccuring Deposit) தவணை வரையறுத்த சேமவைப்பு நிதியும் (Fixed Deposits) நடைமுறையில் இருந்து வருகின்றன. ஏனைய நிறுவனங்கள் நடத்துவதிலும் பார்க்க, கூடிய சலுகைகளும் கவர்ச்சியான வட்டி வீதங்களும் இக்கம்பெனி நிதிகளில் வழங்கப்படுகின்றன.

இத் தொழில்களில் திருப்தியான நிலை ஏற்பட்டு, நிதி வசதியைப் பெற்றதும் மேலும் பல தொழில்களை இதன் தொடர்பில் ஆரம்பித்து நமது நாட்டு மக்களது குறிப்பாக தமிழர்களது-பொருளாதார நிலையை உயர்த்துவதோடு, வேலையற்றோருக்கு வேலைகள் கொடுத்தற்கேற்ற வாய்ப்புக்கள் உள்ள புதிய தொழில் நிறுவனங்களை ஏற்படுத்துவதும் இக்கம்பெனியின் முக்கிய நோக்கமாக இருக்கிறதென்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

இதில் முதற்படி நாஷனல் அச்சகமென்ற தொழிலையும் குறித்த கம்பெனி ஆரம்பித்து நடத்தி வருகிறதென்பதையும் மகிழ்ச்சியுடன் கூறக்கூடியதாக இருக்கிறது. தமிழர்களின் நிறுவனத்தை ஆதரித்து உயர்ந்த நிலைக்குக் கொண்டு வரவேண்டியது, தமிழ் பேசும் மக்களது முக்கிய கடமையாகும்.

தமிழ் பேசும் மக்கள், சிறப்பாக, வடக்குக் கிழக்குமாகாணங்களில் வாழும் தமிழ் மக்கள் இந்த நிறுவனத்தை ஆதரிப்பது நாட்டுக்கும் நல்லது, அவர்களுக்கும் நல்லது.

தொடர் கதை.

## 8. போன பொருள் மீளுமா?

கடல் அலை ஒன்று ஆர்ப்பரித்து எழுந்து கிளம்பி வந்து கரையில் உள்ள மணற்குன்றை மோதிவிட்டுத் திரும்பிச் சென்றது. அந்த அலையோடு அள்ளுப்பட்டு வந்து கரையில் தங்கிவிட்ட மீன் ஒன்று துடியாய்த் துடித்துப் புரண்டது. அடுத்து வந்த இன்னொரு அலை, அநத மீனை மூடிக்கொண்டு பாய்ந்தது. இந்த அலையோடு அந்த மீன் தப்பிப் பிழைத்தது என்று எண்ணும் பொழுது மற்றொரு அலை வந்து மீனைத் தள்ளிக் கொண்டு வந்து கரையில் வெகு தூரத்தில் விட்டுச் சென்றது. கரையில் உறுமீனுக்காக வாடி யிருந்த ஒரு கொக்கு இப்போதைக்கு சிறு மீன் கிடைத்தாலும் பரவாயில்லை என்று எண்ணியதோ என்னவோ மீனைக் கொத்திக்கொண்டு பறந்தது.




கடலைப் படைத்த கடவுள், கடலில் அலையைப் படைத்த கடவுள், அலை நடுவில் மீனைப்படைத்த கடவுள், கரையில் கொக்கைப் படைத்த கடவுள் எல்லாம் ஒரே கடவுள்தானா?

காலிமுகத் திடலில் அமர்ந்து கட

லைப் பார்த்துக் கொண்டிருந்த பொழுது எனது கண்களில் இந்தக் காட்சி விழுந்தது, மனதில் இந்தக் கேள்வி எழுந்தது. நாம் கேட்கும் வினாக்களுக்கு எல்லாம் விடை தர ஒருவரும் இருந்து, அந்த விடைகளும் எமக்குச் சரியாகத் தோன்றுமானால், இன்றைக்கு நாம் இத்துணை துயர் துன்பங்களை அனுபவிக்க வேண்டிவராது என்று நினைக்கிறேன். எல்லாம் அந்த அம்பலத்தான் செயல் என்று காவி கமண்டலம் ஏந்திக் கானகம் போயிருக்கலாம்.

என்னைப்படைத்த கடவுளும், எனது சின்னம்மாவைப் படைத்த கடவுளும், என் சரசுவைப் படைத்த கடவுளும், அந்தத் திருடனைப் படைத்த கடவுளும் ஒருவரேதானா?

ஆழக்கடலில் கிடந்து மேல் மூச்சுக் கீழ் மூச்சு வாங்க திசை தெரியாமல் புரண்டு துடித்த எனக்கு சரசு ஒரு கலங்கரைவிளக்கமாக வந்திருக்கிருள் என்று எண்ணினேன், நான் இத்தனை நாட்கள் முகம் கொடுத்துவந்த சோதனைகளுக்கும் வேதனைகளுக்கும் ஒரு முடிவு வந்துவிட்டது என்று நான் எண்ணியது வெறும் கற்பனைதானா? எனக்கு வாழ்வில் இனி விமோசனமே இல்லையா?

நேற்று இரவு எனது அறையை உடைத்துத் திருடியவன் எனக்குச் சொந்தமானவற்றை யெல்லாம் கொண்டுபோய், இனிமேலும் நான் தேடி வைக்கப்போகும் பொருட்களை முறைக்கு முறை வந்து கொண்டு போவதானாலும் கூட நான் கவலைப்படமாட்டேன். அப்படி எத்தனை கொடுமைகளைச் செய்தும் சரசுவின் பெட்டியை மட்டும் விட்டிருந்தால் நான் மானத்தோடு மனிதனாக வாழலாம். பெரிய நேர்மையாளன் மாதிரி அவளுடைய முகவரியைக் கூட வாங்கிவிட்டேன். இன்றைக்கோ நான் கூறிவந்தபடி அவளிடம் பெட்டியுடன் போகவில்லை. அவள் என்ன நினைத்திருப்பாள்? என்னை ஒரு கள்ளனாய், கபடனாய், தீயவனாய், துரோகியாய் நினைத்திருப்பாளே! அப்படி யாராவது ஒரு அன்னிய பெண் நினைத்தால், போனது போகட்டும் இயன்றதை உழைத்துப் பட்டுக் கொடுப்போம் என்று எண்ணி ஆறுதல் பெற முயலலாம். வாழ்க்கையில் முதன் முதலாக மனதைப் பறிகொடுத்த என் அன்புக் காதலியிடமா இப்படி ஒரு அவப்பெயர் வாங்கவேண்டும்? எனக்கு மானம் வெட்கம் சூடு சொரணை ஏதாவது இருந்தால் இனி அவள் கண்களில் விழிக்கலாமா?

பொருட்கள் திருட்டுப் போய் விட்டதை அறிந்ததும் அக்கம் பக்கத்தில் விசாரித்துப் பார்த்தேன். உபயோகமான தகவல் எதுவும் கிடைக்கவில்லை. நான் முந்தி நான் முந்தி என்று சுயநலக் குறியை நோக்கி ஓடிக்கொண்டிருக்கும் நாசகார கும்பலில் ஒரு நயவஞ்சகனுக்குக் கால் பிடிக்கக் கைபிடிக்க நாலு பேர் இருப்பார்களே தவிர, ஒரு நல்லவனுக்கு உதவ யாரும் முன் வரமாட்டார்கள். அதனால் பொலிஸ் நிலயத்தை நோக்கி நடந்தேன். நான் பொலிஸ் நிலயத்தை அடைந்ததும்—

"ஆகா சிவஞானமா? வாருங்கள், வாருங்கள். உங்கள் வரவு நல்வரவாகட்டும். இந்தா ருங்கள் திருட்டுப்போன உங்களுடைய பெட்டி" என்று என்னை வரவேற்று உட்காரவைத்து உபசரித்துப் பெட்டியைத் தூக்கித்தர, பொலிஸ்காரன் என்ன, வானத்தில் இருந்து குதித்தவனா?

"அப்படியா சங்கதி? உங்கள் புகாரை எழுதி வைக்கிறோம். உங்களுடைய பொருட்களைத் தேட எல்லா வழிகளிலும் முயற்சிக்கிறோம். சந்தேகப்படும் நபர்களின் வீடுகளைச் சோதனை போடுகிறோம். போய்

வாருங்கள்" என்று கை கூப்பினர் பொலிஸ் அதிகாரி. உண்மை. எனது துன்பம் எனக்குத்தான் தெரியும். நீதிபதிக்குத் தூக்குத்தண்டனையும், இறைச்சிக் கடைக்காரனுக்கு உயிர் வதையும் பொலிஸ்காரருக்கு இப்படியான சம்பவங்களும் சர்வ சாதாரணம். எனவே திரும்பி வந்து இழுத்து மூடிக்கொண்டு படுத்தேன்.

ஆமாம் படுத்தேன். ஆனல் பொங்கியெழும் எனது உள்ளம் படுக்குமா? குமுறிக் கொந்தளிக்கும் எனது உணர்வு உறங்குமா? உயிரை அரித்து வரும் மானம் தூங்குமா?

பொருள் கையை விட்டுப் போய்விட்டது. இனி செய்வதற்கு ஒன்றுமேயில்லை அவளுடைய பொருட்களுக்குச் சுமாரான ஒரு பெறுமதி போட்டு —அவளுடைய பணத்தையும் சேர்த்தால் சுமார் ஆயிரம் ரூபா வரும். பணமாகக் கொடுத்து நாணயமாக நடப்பதானுலும் ஆயிரம் ரூபாவுக்கு எங்கே போவது? ஆயிரம் நாட்களுக்கு அரைப்பட்டினி கிடந்தாலும் ஆயிரம் ரூபா தேறுமா?

ஒன்று செய்யலாம். போன மானம் போய்விட்டது. அவ்வளவு தொகையையும் திருப்பித்தர என்னிடமோ வகையில்லை. நானுக அவளுடைய சொத்துகளை அபகரிக்கவில்லை என்பது எனது மனச்சாட்சிக்குத் தெரிகிறது. ஆனபடியால் இனிமேல் மனதை அடக்கிக்கொண்டு சரசுவைப் பார்க்காமலே இருந்துவிட்டால்?

எப்படி முடியும்? அவளும் கொழும்பில் வாழ்கிருள். நானும் கொழும்பில் வாழ்கிறேன். நேற்று இரவு அவளைத் தற்செயலாகத் தியேட்டரில் சந்தித்தது போல எங்காவது வழியில் தெருவில் காண நேர்ந்தால்?

காண நேர்ந்தால் என்ன? காணுதது போல போய்விடவேண்டியதுதான். எங்காவது குறுக்கே பாய்ந்து நழுவிவிட வேண்டியது தான்.

நழுவிவிட முடியாதபடி எதிரெதிரே சந்தித்துவிட்டால்? நான் வேலை பார்க்கும் இடத்தைக்கூட பெருமையாக அவளிடம் சொல்லியிருக்கிறேன். இப்பவோ பிறகோ நாளையோ மறுநாளோ சரசு அல்லது அவளுடைய அண்ணன் சதாசிவம் அலுவலக வாயிலில் வந்து நிற்கலாம்.

அப்படியான ஒரு நிலை வருமுன்னர் நானுக அவளுடைய வீட்டுக்குப் போய் சதாசிவத்திடம் நடந்த விஷயத்தை விளக்கமாகக் கூறி, மன்னிப்புக் கேட்டு, விரைவில் அதற்குரிய பெறுமதியைத் தருவதாகக் கூறலாம்.

கூறினுல் நம்புவார்களா? ஏமாற்றுக்காரரும் எத்தரும் நிறைந்துள்ள இந்தக் காலத்தில் எனது வார்த்தைக்கு மதிப்பு இருக்குமா? நம்பிக்கை ஏற்படாமல் சரசு—என்னுடைய சரசு வித்தியாசமாக எண்ணி என்னைத் தன் இதயக்கோவிலில் இருந்து தூக்கித் தூர எறிந்து விட்டால்?

வேண்டாம்.

நான் அவர்களைக் காணவும் வேண்டாம். விஷயத்தைக் கூறவும் வேண்டாம். எனக்கு இந்த உத்தியோகமும் வேண்டாம். கொழும்பு வாழ்க்கையும் வேண்டாம், இந்தப் பாழ்பட்ட பரதேசிக் கூட்டத்தின் சகவாசமும் வேண்டாம், பூசி மினுக்கித் திரியும் இந்தத் திருட்டுச் சமூகத்தின் உறவும் வேண்டாம். ஒன்றுமே வேண்டாம். நான் எல்லாவற்றையும் உதறி எறிந்துவிட்டு எங்கேயாவது கண் காணுத இடத்துக்கு ஓடி விடப் போகிறேன்.

ஓடி?

ஓடியா? அங்கு கல் உடைத்தோ மண் சுமந்தோ பொருள் தேடுவேன்.

தேடிய பொருளைச் சதம் சதமாகச் சேர்த்து ஆயிரம் ரூபாவாக்குவேன். நேராகக் கொழும்புக்குத் திரும்பி வந்து சதாசிவத்திடம் போய், 'இந் தாருங்கள் உங்களுடைய கடன். நான் உபயோகப் படுத்தாமல் சமூகத்தால் வஞ்சித்து அபகரிக்கப்பட்ட கடனை இத்தனை காலமாக நினைவில் வைத்துத் திருப்பித் தருவதால் என்னைச் சரசுவுக்கு மாப்பிள்ளையாக்குவதில் உங்களுக்குச் சங்கடம் இருக்காது என்னுடைய சரசுவை என்னிடமே தந்துவிடுங்கள்" என்று கேட்பேன். அப்படிக் கேட்கலாம் தான்; அதற்கிடையில் சரசுவுக்குக் கல்யாணம் ஆகிவிட்டால்?

ஆமாம், கல்யாணம் ஆகிவிட்டால்?

நினைக்கவே எனக்கு உடல் நடுங்குகிறது. எனது இதயப் பாறையை மோகனப் புன்னகையால் அசைத்து, விழி உழியால் செதுக்கி கோவில் சமைத்துக் குடிவந்த சரசுவை இன்னொருவன் மணம செய்வதா? அதன் மேலும் நான் உயிர் இருந்தும் இல்லாமல், உணர்வு இருந்தும் இல்லாமல், உண்டு உடுத்து. உயிர் தரித்து பித்தனாய், பேயனாய், பைத்தியமாய் இந்தக் கேடு கெட்ட குவலயத்தில் நடமாடுவதா? சேச்சே!

சிந்திக்கச் சிந்திக்க எனக்கு மூளை கலங்கிக் கொண்டு வந்தது. இனிமேல் நடப்பவையெல்லாம் தலைவிதி என்று ஒன்று இருந்தால் அதன் வழியாகட்டும். இறைவன் என்று ஒருவன் இருந்தால் அவன் செயலாகட்டும். சிந்தனைப் பெருக்குக்கு முத்தாய்ப்பு வைத்துவிட்டு எழுந்தேன். உண்பது நாழியாம், உடுப்பது நான்கு முழமாம், எண்ணுவன கோடியாம். நான் மட்டும் விதிவிலக்கா?

காற்றுச் சோவென்று வீசிக் கொண்டிருந்தது. சனங்கள் குறுக்கும் நெடுக்குமாக நடந்து காலி முகத் திடலை அளந்து கொண்டிருந்தார்கள்.

பஸ் நிலையத்துக்குப் போய் பஸ் ஏறுவோம் என்று புறப்பட்ட என்னை, "அதோ சிவஞானம்!" என்ற குரல் திரும்பிப் பார்க்க வைத்தது.

"சரசு! நீயா?"

அவளோடு கூடி நிற்பவர்கள் அவளுடைய அண்ணனும் அண்ணியுமோ?

கடல் பொங்கி யெழுந்து தரையை மூடியது. எதிரே தெரிந்த பாராளுமன்றக் கட்டடம் பூமிக்குள் அமிழ்ந்து மறைந்தது. வானம் வெடித்துச் சிதறிப் பொலு பொலுவென்று பூமியில் விழுந்தது.

நான் தலையை அமுக்கிப் பிடித்தபடி தள்ளாடியதுதான் நினைவில் இருக்கிறது. தடால் என்று பிரக்ஞை அற்றுப் பூமியில் விழுந்தது நினைவில் இல்லை

---

திரிகோணமலை, புத்தளம், அனுராதபுரம் நீர்கொழும்பு, மன்னார், நுவரெலியா, நாவலப்பிட்டி, இரத்தினபுரி, பதுளை முதலிய இடங்களில் **கலைச்செல்வி** விற்பனையாளர்கள் தேவை.

# 9. இதயம் நின்றது.

கண்களைத் திறந்தேன்.

திறந்த கண்களில் முதன் முதலாக எதிரே சுவரில் மாட்டப்பட்டிருந்த புத்தபகவானின் படம்தான் பட்டது. மனிதர் கடைத்தேற வழி தேடித் தன் வாழ்வைத் தியாகம் செய்த புத்தபகவான். அந்தப் படத்தைப் பார்க்க எனக்கு வெட்கமாக இருந்தது. வேறு பக்கம் பார்க்க முயன்றேன்.

ஏசுநாதர்!

'உனக்குப் பிறர் எதைச் செய்யக் கூடாதென்று எண்ணுகிறாயோ அதை நீ பிறருக்கும் செய்யாதே' என்று சொன்ன ஏசுநாதரின் படம் மறுபக்கத்தில் தொங்கியது. எனது கண்களைப் பிடுங்கிப் பார்வையை வேறு பக்கம் திருப்ப முயன்றேன்.

சரஸ்வதி!

சரசு எனக்கு அருகில் அமர்ந்திருந்து என்னையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுடைய முகத்தில் ஒரு புதிய மலர்ச்சி பிறந்தது. பிரவாகித்துப் பரந்தது. உதடுகள் துடித்தன கண்கள்—ஆமாம் அந்தக் கண்கள் இல்லை கண்களா அவை? நீலோற்பல மலர் என்கிறார்கள், குமுத மலர் என்கிறார்கள், அவற்றை நான் பார்த்ததில்லை. எனக்குத் தெரியாது. ஒருவேளை அந்த மலர்கள் சரசுவின் வண்டு விழிகளைப் போலத்தான் அழகாக இருக்குமோ?

'சிவஞானம்!' யாரோ கூப்பிட்டார்கள்.

திரும்பிப் பார்த்தேன். யார் இவர்? இவருக்கு என்னுடைய பெயர் கூடத் தெரிந்திருக்கிறதே! ஓகோ! காலிமுகத்திடலில்......சரசு... இவர் இவர்தான் சதாசிவமோ? நான் சதாசிவத்தின் வீட்டில்தான் இருக்கிறேனோ?

கைகளைக் கட்டிலில் ஊன்றி எழுந்து உட்கார முயன்றேன். அவர் நெருங்கி வந்து கை தந்து எழுந்து உட்கார வசதி செய்தார்.

'நான் எங்கே இருக்கிறேன்? நீங்கள்......?'' என்று நான் தான் கேட்டேன்.

''நான் சரசுவின் அண்ணன். நீங்கள் இந்த அறைக்குக் குடி வர வேண்டும் என்று சரசுவிடம் சொன்னீர்களாம். அந்தக் காரியத்தை நீங்கள் அறியாமலே செய்து விட்டோம்'' என்று சதாசிவம் சொல்லிச் சிரித்தார்.

நானும் சிரிக்க முயன்றேன்...

சிரிப்பு என்ன வேண்டிக் கிடக்கிறது யாருடைய கண்களில் படாமல் ஊரைவிட்டே ஓடிவிடத் திட்டமிட்டேனோ அவர்களுடைய அன்புக் கயிற்றால் பிணைக்கப்பட்டு இருக்கிறேனே. மனிதன் நினைத்தது நினைத்தபடி எந்தக் காரியத்தைத்தான் செய்யமுடிகிறது?

அடுத்து?

சதாசிவம் கடைக்குப் போக ஆயத்தம் செய்தார். முன் ஒருமுறை செய்த அதே தவறைத் திருப்பிச் செய்து இந்த வேலையையும் போக்கடித்துக்கொள்ள நான் தயாராக இல்லை. எனவே வேலைக்குப் போக வேண்டுமென்று எண்ணினேன். எனது எண்ணத்தை வெளியில் சொல்லவும் செய்தேன்.

சதாசிவம் தடுத்துவிட்டார்.

'உங்களுக்கு உடல் பூரண சுகமாகும் வரை ஓய்வெடுத்துக்கொள்ளுங்கள். வேண்டுமென்றால் லீவு கேட்டு ஒரு கடிதம் எழுதித் தாருங்கள் உங்கள் கந்தோருக்கு அனுப்பி விடுகிறேன்" என்று சதாசிவம் அன்பாகச் சொன்னார். சரசு அவருடைய பேச்சை ஆமோதித்துப் பேசினாள்.

சரசு எந்நேரமும் எனக்குப் பக்கத்தில் இருந்து வேண்டியவற்றைச் செய்து தந்தாள். கையை அசைத்தால் 'வலிக்கிறதா' என்று பரிவோடு கேட்பாள். காலை அசைத்தால் 'நோகிறதா' என்று பேரன்போடு கேட்பாள் இந்தப் பக்கம் திரும்பினால்



'கோப்பி தரட்டுமா' என்பாள். அந்தப்பக்கம் திரும்பினால் 'ஹோர்லிகஸ் தரட்டுமா' என்பாள். நிலத்தைப் பார்த்தால் 'களைப்பாக இருக்கிறதா' என்று ஆதரவாக வினவுவாள். மேலே பார்த்தால் 'பசியாக இருக்கிறதா' என்று பண்பாக வினவுவாள். அவள் இரவு பகலாக ஊணை மறந்து உறக்கத்தை மறந்து எனக்குப் பக்கத்தில் இருந்து செய்த பணிவிடைகள் —

சரசு! நீ எனக்கென்றே பிறந்தவளம்மா.

இரண்டொரு தினங்களில் எனது உடலில் பழைய பலமும் உற்சாகமும் ஏற்பட்டுவிட்டன. இத்தனை நாட்களாக எனக்கு என்ன நோய் இருந்தது? கண்ணை வெட்டி கண்ணின் பாவையைப் பிரித்து நுட்பமாக சிகிச்சை செய்து குருடனுக்கே பார்வையை அளிக்கும் நுண்ணறிவாளர்களுக்கு, உடலைக் கீறி உள்ளே எங்கோ ஒழிந்திருக்கும் இதயத்தைக் கிழித்து வைத்தியம் செய்து உயிரைக் கொடுக்கும் மகா மேதாவிகளுக்கு, மனநோயைத் தீர்த்து வைக்க எந்தச் சூட்சும வழியும் தெரியவே தெரியாதா?

அன்பு செலுத்துவதில், பண்போடு பழகுவதில், விழுந்து விழுந்து உபசரிப்பதில், உதவுவதில், சரசு முன்னின்றாள். அதற்குக் காரணமும் இருந்தது அவள் என் உள்ளம் கவர்ந்த 'கள்ளி'. ஆனால் சதாசிவம் ஏன் இப்படி என்னில் இவ்வளவு அன்பு காட்டுகிறார்?

சதாசிவத்துக்கு முப்பது வயதிருக்கலாம். வயதுக்கேற்ற ஆஜானுபாகுவான தோற்றம். சிரித்த முகம், அகன்ற நெற்றி, சுருண்ட தலைமயிர் இவைகள் அவரைப் பார்த்த மாத்திரத்தில் வெளித்தோன்றுபவை. இவைகளுக்கு அப்பால் யாரும் அறியாவண்ணம் ஒரு நல்ல இதயமும் இருக்கிறதே! அவருடைய நல்ல குணத்துக்கு ஆண்டவன் ஒரு நல்ல மனைவியையும் கொடுத்திருக்கிறார். அவளுக்குப் பெயரும் லட்சுமிதான். அவளும் லட்சுமிதான். ஒரே வீட்டில் லட்சுமியும் சரஸ்வதியும் ஐக்கியமாக இருக்க மாட்டார்கள் என்று நம் மூதாதையர் முடிவு கட்டிய பொழுது இந்த லட்சுமியும் சரஸ்வதியும் சம்பந்தப்பட்டிருக்க மாட்டார்கள். போலும்!

அன்று இரவு எட்டு மணியிருக்கலாம். நான் ஒரு நாற்காலியில் அமர்ந்து அன்றைய பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தேன், சதாசிவம் என் எதிரே வந்து உட்கார்ந்தார்.

"மிஸ்டர் சிவஞானம்! நாளைக்கு நீங்கள் வேலைக்குப் போகவேண்டிய தினமல்லவா? உடம்பு இப்போ எப்படி இருக்கிறது?" என்று கேட்டார்.

"இப்பொழுது எனக்கு நல்ல சுகம். நாளைக்கு வேலைக்குப் போக வேண்டியது தான்" என்றேன்.

"காலையில் எழுந்து குளிர்ந்த நீரில் குளித்து விடாதீர்கள். சரசுவிடம் சொல்லியிருக்கிறேன். வென்னீர் போட்டுத் தருவாள். குளித்து விட்டுப் போங்கள்"

ஒரு அந்நியனை என்னை இப்படித் தூக்கிப் பேணும் பொழுது நான் என்ன செய்ய முடியும். மௌனமாக இருந்துவிட்டேன். அவரே தொடர்ந்து சொன்னார்—

"நாளைக்குச் சனிக்கிழமை, வேலை அரை நேரம்தானே?

"ஆமாம்."

"மாலையில் போய் உங்கள் சமான்களை எடுத்துக்கொண்டு அந்த அறைக்காரரிடம் அறிவித்து விட்டு வாருங்கள்."

நான் பேசவில்லை.

''சாப்பாட்டைக் கண்டபடி சடையிலும் தெருவிலும் வைத்து உடம்பைக் கெடுக்காமல் இங்கேயே அதையெல்லாம் வைத்துக் கொண்டால் நல்லது."

''வந்து......"

''ஒன்றும் வராது. இனிமேல் இது உங்களுடைய வீடு தான். போகப் போக எல்லாம் பேசிக் கொள்ளலாம்".

எனக்கு ஏதோ ஒரு உணர்ச்சி இதயத்தில் சுரந்து பெருகி வந்து தொண்டையை அடைத்தது. ''ஊர் பேர் தெரியாத எனக்கு இப்படியெல்லாம் உதவும் உங்களுக்கு நான் என்ன கைமாறு செய்யப் போகிறேன்." என்று உணர்ச்சி வசப்பட்டுக் கூறினேன்.

'அதெல்லாம் செய்யவேண்டாம். நாளைக்கு எங்கள் வீட்டுக்கு மாப்பிள்ளையாக வரப் போகிற உங்களுக்கு இந்த வரையாவது செய்யா விட்டால், யார் கோபிக்காவிட்டாலும் சரசு கோபித்துக் கொள்வாள்' என்று கூறிவிட்டுச் சிரித்தார். எழுந்து போய்விட்டார்.

அன்பு என்றால் என்ன என்பதை உணர்த்தத்தான் சரசுவும் சதாசிவமும் என் வாழ்க்கையில் குறுகிட்டார்களா? எனது இருபத்தைந்து வருட வாழ்க்கையில் நினைவுள்ளதாக, என்னில் அன்பு செலுத்தியவர்கள். பெற்றவர்களுக்கு அடுத்த படியாக இந்த இருவரும் தான்.

மறு நாள் நான் எனது முந்திய அறைக்குச் சென்று கணக்கு வழக்கை முடித்துக்கொண்டு எஞ்சியிருந்த பொருட்களை எடுத்துக் கொண்டு திரும்பிவிட்டேன். கொண்டு வந்த பொருட்களை அடுக்கி விட்டு நிமிர்ந்த போது—

''அத்தான்..." என்று செல்லமாக அழைத்துக்கொண்டு சரசு அறைக்குள் நுழைந்தாள்.

''ஓ! எப்போதிருந்து இந்த முறை?" என்று நான் சரசுவைக் கேட்டேன்.

''இனிமேல் நீங்கள் எனது அத்தான் என்றும் நான் அத்தானின் காரியதரிசி என்றும் ஒரு சட்டத்தை நானே பிரேரித்து நானே அனுமதித்து ஏக மனதாக நிறைவேற்றப்படுகிறது" என்றாள் சரசு இந்தப் பேச்செல்லாம் இவ்வளவு காலமும் எங்கு போய்க் கிடந்ததோ?

''அந்தக் காரியதரிசியின் 'கண்ட்ரோல்' கடுமையாக இருந்தால் அத்தான் பதவியை ராஜினாமாச் செய்து விட்டு பதின்னான்கு வருடம் வனத்துக்கும் இருபத்தெட்டு வருடம் பாலைவனத்துக்கும் போகவேண்டியது என்ற பிரிவும் அந்தச் சட்டத்தில் சேர்க்கப்படுகிறதாம்."

''காரியதரிசியின் விசேஷ அதிகாரத்தால் அந்தப் பிரிவு படுமோசமாகப் பரிதாபமாகத் தள்ளுபடி செய்யப்படுகிறதாம்."

காரியதரிசியம்மையாரின் அகராதியில் காரியதரிசி என்றால் எசமானி என்ற பொருளும் உண்டோ என்பதை அறிய நான் ஆசைப் படுகிறேனாம்."

''அதற்கு வேறு ஒரு பொல்லாத பொருளும் உண்டு என்று சொல்ல நான் ஆசைப்படுகிறேனாம்".

'தங்கள் சித்தம் தமியேன் 'சறண்டர்' என்று அப்பாவி அத்தான் சரணடைகிறாராம்."

''நீங்கள் உங்கள் பெட்டி படுக்கைகளுடன் இந்த அறைக்கு உத்தியோக பூர்வமாக வந்தாயிற்று." என்று சரசு இடுப்பில் கையை வைத்து தலையைச் சரித்து அவள் சொன்ன காரியதரிசியின் தோரணையில் கேட்டாள்.

''வந்தாச்சம்மா வந்தாச்சு!"

''சரி அவசரம் ஒரு சாரி தேவையாக இருக்கிறது. என்னுடைய பெட்டியை இப்படித் தள்ளுங்கள்" என்று சரசு கேட்டாள்.

எனக்கோ—

இதயம் நின்றது; நின்றேவிட்டது.

(தொடரும்)

# அண்ணாமலை நகரிலே!

—வித்துவான் க. ந. வேலன்.—

## 6. ஏன் இந்த வறுமை?

இந்தியாவின் தாஜ்மகால் எப்படி உலகப் பிரசித்திபெற்றிருக்கிறதோ, இந்தியாவின் தரித்திரமும் உலகறிந்த ஒன்று. கன்னிமேயோ என்னும் அமெரிக்கமாது இந்தியாவை ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு, இந்தியாவின் வறுமையைப் படம் பிடித்து ஒரு புத்தகம் எழுதியுள்ளாள். இந்தியாவில் அவளால் வறுமையைத்தான் காணமுடிந்தது வருந்தக் கூடியதே, இருப்பினும் அவள் வார்த்தையிலும் உண்மையிருக்கிறது. கன்னிமேயோவின் கருத்துக்களைத் தாக்கி இந்தியாவில் சில கூட்டங்களில் பேசியிருக்கிறேன். அது கன்னிமேயோவின் காதுகளில் விழுந்திருக்காதென்று எனக்குத் தெரியும். யார் அதைப்பற்றியெல்லாம் அப்போது கவலைப்பட்டது? வெள்ளைத் தோலைத்தாக்குவதற்கு ஒரு துரும்பு கிடைத்தாலும் போதுமே அதை அஸ்திரமாக்கிற இளமைத் துணிச்சல் அப்போது விண்விண்ணென்று தெறித்தது.

கன்னிமேயோ என்ன, இந்தியாவைப்பற்றி எண்ணினவர்கள், எழுதியவர்கள் புரையோடிப் போயிருக்கும் அதன் வறுமையைச் சித்திரிக்காமல் விட்டதில்லை. இந்தியராயினும் வெளிநாட்டினராயினும் அதன் வறுமையையும் அது தீர்க்கும் வழிகளையும் பலவாறு கூறியிருக்கின்றனர். இந்தியமண்ணில் இயங்கும் பல் வேறு அரசியற் கட்சிகளின் பொருளாதார அரசியற் கொள்கைகள் வறுமைதீர வழிகாட்டுகின்றன.

இந்த வறுமைக்குக் காரணம் இந்தியாவின் வளக்குறை வென்று யாரும் சொல்லமாட்டார்கள். பூவுருண்டையின் நல்ல பகுதியிலேயே இந்திய நாடு அமைந்திருக்கிறது. இயற்கையாகவே வளமுள்ள நாடாக இருந்தும் அந்நாட்டில் நீண்டு புரையோடிப் போயிருக்கும் வறுமைக்குக் காரணமென்ன? இந்தியத் தாயின் இயற்கைவளனை வேதகாலப் புலவன் தொடக்கம் இன்றுள்ள கவிஞன் வரை புகழ்ந்திருக்கின்றனர். நீண்டுயர்ந்தமலைகளும் பேராறுகளுமாகக் காட்சியளிக்கிறது. கடல் வளத்துக்கும் கனிவளத்துக்கும் குறைவில்லை. இயற்கையன்னையின் அருள்நோக்கு முழுக்க முழுக்கப் பெற்றுள்ளது. அந்த நாட்டின் வறுமைக்கு இந்தியத்தாய் காரணமல்லள். அவள் வயிற்றில் பிறந்த மனிதப்பதர்களே காரணமாவர். மண்வளமுள்ள நாட்டில் மனவளமுள்ள மக்கள் அருகியுள்ளனர்.

> நாடா கொன்றோ காடா கொன்றோ
> அவலா கொன்றோ மிசையா கொன்றோ
> எவ்வழி நல்லவர் ஆடவர்
> அவ்வழி நல்லை வாழிய நிலனே.

என்ற ஔவை வாக்கு மக்கள் மன வளத்தையே குறிக்கிறது. நல்லவர் வாழ்வது நாடு என்பது கருத்து.

இந்தியா வறிய நாடு என்ற தொடர் இந்திய மண்ணின் வறுமையைக் குறிக்கவில்லை; குறிக்கக் கூடாது. இந்தியரில் பெரும்பாலோரின் மனவறுமையையே அது குறிக்கிறது, குறிக்கவேண்டும். உலகச் செல்வர் வரிசையில் வைத்து எண்ணத்தகும் செல்வர்களும் அங்கே

யிருக்கிறார்கள். அவர்களிடம் குவிந்து கிடக்கும் கோடிக்கணக்கான செல்வம், பலரைக் கோவணாண்டிகளாக்கியிருக்கிறது. இலங்கையைவிட இந்தியா வறியநாடு என்றும் சொல்லப்படுகிறது. இதனாலேதான் இந்தியாவிலிருந்து கள்ளத் தோணிகள் வருகின்றன என்றும் பேசப்படுகிறது. உண்மையில் இலங்கையைவிட எத்தனையோ மடங்கு செல்வமுள்ள நாடு இந்தியாவாகும். இந்தமாறுபட்ட கருத்துக்குக் காரணமிருக்கிறது. மேலெழுந்த வாரியாகப் பார்ப்பவர்களுக்கு உண்மைநிலை புலப்படுவதில்லை.

ஆராய்ந்து பார்ப்போமானால் இந்தியாவில் செல்வமிருக்கிறது, செலாவணி (பணப்புழக்கம்) இல்லை, செந்தழிப்பில்லை. இலங்கையில் குறைவான செல்வமிருந்த போதிலும் செலாவணியிருக்கிறது. செந்தழிப்பும் இருக்கிறது.

இந்த நிலைக்குக் காரணம் மண்ணில் இல்லை; மக்கள் மனதில் இருக்கிறது. இந்தியரின் பெருஞ் செல்வரும் மேல்வகுப்பிற் பிரயாணஞ் செய்யார். சிக்கனம் என்ற போர்வையில் பிச்சைக்காரத்தனமும் செலவாளி என்ற பெயரில் ஊதாரித்தனமும் உலக இயல்பு. நூறு ரூபாய் சம்பளம் வாங்கும் ஓர் இந்தியன் ரூ 75 ஐ மிச்சம் பிடிப்பான். மிகுதி ரூ 25 ஐயே தன் செலவுக்கு எடுத்துக்கொள்வான். எனவே அவனது அந்த மாதச்செலாவணி, பணப்புழக்கம் ரூ. 25 தான். அவன் குடும்பச் செந்தழிப்பும் ரூ. 25 தான் மிகுதி ரூ 75ம் சேமிப்பு என்ற பெயரில் முடக்கப்பட்டுள்ளது ஆனால் நூறு ரூபா சம்பளமுடைய ஓர் இலங்கையன் ரூ75ஐச் செலவுக்கு எடுத்துக்கொள்வான். ரூ 25ஐ யே சேமிப்புக்கு ஒதுக்குவான். (பலரிடம் இந்தப் பழக்கம் இல்லை) அவனது செலாவணி, பணப்புழக்கம் ரூ 75. அவனது செந்தழிப்பும் அந்தமாதத்தில் ரூ 75 பெறுமதியுடையது.

ரூ 250, 300 சம்பளம் வாங்கும் தமிழாசிரியரும் ரூ 350, 400 வாங்கும் பட்டதாரிகளும் இலங்கையில் மோட்டார் வண்டி வைத்திருக்கிறார்கள். மோட்டார் வண்டி வைத்திருப்பவர், அதன் பராமரிப்புச் செலவுக்காக மாத்திரம் ரூ 100ல் இருந்து ரூ 150 வரை மாதம் செலவழித்தாக வேண்டும். குறைந்த சம்பளம் வாங்கும் ஆசிரியர் ரூ 150ஐ தன் மோட்டார் வண்டிக்காகச் செலவு செய்கிறார். இது போன்ற நிலை இலங்கையில் செலாவணியையும் செந்தழிப்பையும் பெருக்குகிறது. இதற்கு மாறான நிலையே இந்தியாவில் உள்ளது. மிகப் பெருஞ் செல்வரும் பஸ்வண்டியிலும் சைக்கிளிலுமே பிரயாணஞ் செய்வர். பெருந்தொகை வருமானமுடைய வக்கீல்கள்கூட மோட்டார் வண்டி வைத்திருப்பதில்லை. இதனால் இந்தியாவின் பெருஞ் செல்வம் இந்தியரின் மனப்பான்மைக்கேற்ப முடங்கிக் கிடக்கிறது. செல்வம் இருந்தும் செலாவணிக்குறைவால் செந்தழிப் பின்றிக் காணப்படுகிறது. புகை வண்டியிலிருந்து இறங்கும் பணக்காரப் பிரயாணியும் 4 அணாக் கொடுத்துத் தன் பெட்டியைத் தூக்குவிக்காமல், தானே தூக்கிச் செல்வான். இதனால் 4 அணா முடங்குகிறது. வண்டி நிலையங்களில் அலையப் பறக்கும் ஏழைகள், வயிற்றினும வாயினும் அடித்துப் பிச்சை கேட்கிறார்கள்.

இலங்கையில் இருக்கும் செல்வத்திற்கு அதிகமான செலாவணியும் செந்தழிப்பும் போட்டிபோடுகின்றன. முடக்கும் மனப்பான்மை மனித சமுதாயத்தின் கொடூரமான விரோதி, சிக்கனம் சேமிப்பு வேறு, முடக்கல் பதுக்கல் வேறு, தமிழர் இயல்புக்கு மாறான இந்தக் கொடிய பழக்கம் எப்படிப் புகுந்ததோ?

என்னெடுஞ் சூழாது
இன்னோர்க் கென்னாது
வல்லாங்கு வாழ்த்தும் என்னாது
எல்லார்க்கும் கொடு

நீயும் கொடு நானும் கொடுக்கிறேன் என்கிறான் ஒரு தமிழ்ப் புலவன். தாங்க முடியாத வறுமையில் வாடிய புலவன், குமணனிடம் பெற்ற செல்வத்தை முடக்கவேண்டும் என்று விரும்பவில்லை. இது தமிழ் நெஞ்சம்

முடங்கிக் கிடக்கும் இந்தியாவின் செல்வத்தைப் புழக்கத்திற்கு விடும் வழியை இந்திய அரசியல்வாதிகள் தெரிந்து கொள்ளவேண்டும். மிகச்சிறந்த உழைப்பாளிகளும் வல்லுநரும் வறுமையால் வாடுவதற்குக் காரணம் செல்வத்திற்கேற்ற செலாவணி இன்மையே. நாட்டில் புதிய புதிய ஐந்து ஆண்டுத் திட்டங்களை உருவாக்குவது பயன் உள்ள செயல்தான். திட்டங்கள் உருவாவதற்கு முன்பே, திட்டத்திற்கான முதலை முடக்கப்படுவதும் உண்டு. மீறி வெற்றிகரமாகத் திட்டம் நடைபெற்றாலும் அதன் பயன் ஒரு சில சுயநலக்காரரால் முடக்கப்படுவதும் உண்டு. இந் நிலையில் இந்தியா எவ்வளவு பெரிய திட்டங்களைத் தீட்டியபோதிலும், தன் பசியைத் தீர்க்காத நாடாகவே விளங்கும் என்பதில் ஐயமில்லை.

வறுமை யென்பது நெஞ்சின் வரட்சி. இந்த வரட்சி மாறாதவரையில் எவ்வளவு செல்வமிருந்தும் பயனில்லை. பையில் உள்ள வறுமை தீர்க்கப்படலாம் ஆனால் நெஞ்சுத் தரித்திரத்தை எப்படித்தீர்ப்பது? 'நான் என்னிடமுள்ள கடைசிக் கால் சதத்தையும் ஒரு பிச்சைக்காரனைப் போல் வேட்டித் தலைப்பில் முடிந்து வைத்திருக்கமாட்டேன். ஒரு மாகாராஜாவைப்போல் விட்டெறிவேன்" என்ற மனப்பான்மை என்று வருமோ,

பொருளை முடக்கி முடக்கி சமஸ்தானாதிபதிகளானார்கள்; ஜமீன்தார்களானார்கள்; மிராசு தாரானார்கள், மடாதிபதிகளானார்கள். இந்தியரெல்லாரும் இப்படியாக முடிந்ததா? முடியுமா? ஆனால் எல்லாரும் வயிறார உண்டு, உடுத்து வாழமுடியும் வாழவேண்டும். முடக்குங்குணம் இலங்கையில் இல்லை என்று கூறமுடியாது. இலங்கையில் வாழும் சிங்களவர், தமிழர், முஸ்லீம்களில் பெரும்பாலோரிடம் இந்தக் குணமில்லை யென்றே சொல்லலாம். இந்தியாவிலிருந்து இங்கு வந்து குடியேறிப் பொருள் திரட்டும் முதலாளி மனப்பான்மை கொண்டவர்களிடம் உள்ள இந்தப் பதுக்கல் குணம் மெல்ல மெல்ல இலங்கையரிடமும் பரவி வருவதை மறைக்கமுடியாது. நாளடைவில் இலங்கையும் இந்தியாவாகிவிடுமோ என்ற அச்சம், தெய்வச் செயலால் இன்றைய ஆட்சியாளரின் சம தர்மக் கொள்கை மூலம் தவிர்க்கப்படுவது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

வண்டி திருச்சினாப் பள்ளி கேட்கக் கூவியது. திருச்சி நடுங்கியிருக்கவேண்டும். மானாமதுரையும் காரைக்குடியும் வழியிலுள்ள பெரிய வண்டி நிலையங்கள். அந்த நிலையங்களைப் பொறுத்தவரையில் எதை மறந்தாலும் அங்கே குடித்த காபியை மறக்கமுடியாது. காபியா? கோப்பியைத்தான் சொல்லுகிறேன். நான் குடித்தது காபிதான். கோப்பி என்றால் கட்டை மிதக்க வேண்டுமே.

மானாமதுரையில் வண்டி பத்து நிமிஷம் வரையில் நிற்கலாம். அந்தப்பத்து நிமிஷத்தை பொன்னாக மாற்றும் ஒரு மனிதனை முதன் முதலாக அங்கேதான் நான் பார்த்தேன். நேரம் பொன்னுக்குச் சமம் என்று படித்தது நினைவுக்கு வந்தது. பொருளும் விளங்கியது. நேரத்தைப் பொன்னாக்கும் அந்த மனிதனை நோக்கி எல்லோரும் ஓடினார்கள். நானும் வண்டியை விட்டு இறங்கி மெதுவாக நடந்து சென்றேன். அந்தமனிதன் நிற்குமிடம் ஐ. ஆர். றூம் அதாவது இந்தியன் றெயில்வே

றாம். "எனக்குக் காபி, எனக்கு 2 வடை ஒரு லட்டுக் குடுசாமி, ஐயரே 2 பூரிமசாலே," இப்படி நூற்றுக் கணக்கானவர் பிச்சுப் பிடுங்கச் சிரித்தமுகத்துடன் அத்தனை சவாலையும் ஏற்றுக் கொண்டிருந்தான் அந்த மனிதன். "வாடிக்கைகாரரின் மனத்திருப்தியே எமது வியாபார நோக்கம்" என்று வியாபாரிகள் விளம்பரம் செய்வது பொய்யல்ல கணக்காகப் பணம் பெற்றுக் கொண்டு சில்லறையாகத் திருப்பிக் கொடுத்து வியாபாரம் செய்யும் வித்தகம் அந்தப் பிராமணனுக்கு எப்படி வந்தது? வண்டி தங்கி நிற்கும் அந்தப் பத்து நிமிஷத்தையும் பொன்னாக மாற்றுகிறானே மனிஷன்.

பொதுவாகவே பிரயாணம் செய்வதற்கென்று சில தனித்திறமைகள் வேண்டும். வண்டி வந்ததும் வராததுமாக முண்டியடித்துக் கொண்டு முதலில் ஏறத்தெரிய வேண்டும். பிரயாணம் செய்கிறவர்கள் பெரும்பாலும் பெரிய பெட்டி, மெத்தை உணவு, பேணி, கூசா இப்படி வீட்டையே சுருட்டிக் கட்டிக்கொண்டு வருவார்கள். ஒரு டிக்கட் பெற்று வண்டியேறியவர் முதல் வேலையாக மெத்தையை விரித்து ஒன்பது பேருடைய இடத்தையும் புக் செய்து செய்து கொள்ளுவார். பெட்டி கூசாக்களை வைக்க வேண்டிய இடத்தில் வைத்துவிட்டு நீட்டி நிமிர்ந்து படுத்துக்கொள்வார். உள்ளே இருந்தவர்களும் புதிதாக ஏறியவர்களும் இடமில்லாமல் ஒதுங்கி நிற்பார்கள். படுத்துக் கிடக்கும் பேர்வழிக்கு இதெல்லாம் கண்ணில்படாது அவசரம் அவசரமாக அன்றைய தினசரியை எடுத்துப் படிக்க ஆரம்பித்து விடுவார் "நீங்கள் எதுவரைக்கும் சார்? இன்னிக்கு ஜாஸ்தி கூட்டம் இல்லீங்களா?" என்று கேட்டு மற்றவர் நலனில் தனக்குள்ள அக்கறையையும் காட்டிக் கொள்வார். வண்டியின் அனுக்கத்தோடு குறட்டை விட்டுத் தூங்கக் கூடியபிரகிருதிகளும இருக்கிறார்கள். இவர்களால் இதை எப்படிச் செய்யமுடிகிறதோ? இதுவும் ஒரு வித்தகமல்லவா?

ஏறக்குறைய இரவு ஒன்பது மணி வண்டி திருச்சினப்பள்ளியையடைந்தது. புகைவண்டி நிலையம் மிகப் பெரியது. வண்டி, நிலையத்திற்குள் நுழையும்போது உண்டாகும் உணர்ச்சி தனியானது. வண்டியும் தனது நீண்ட பிரயாணத்தின் ஒரு பகுதியை வெற்றிகரமாக முடித்து விட்ட பெருமிதத்தோடு வெயர்லவ சிந்த நின்றது. நூற்றுக் கணக்கானவர்கள் இறங்கினர்கள். ஏறினர்கள், நானும் இறங்கினேன்.

எனது பிரயாணச் சீட்டு திருச்சிக்கு மேற் செல்லாது. முன்பின் இடம் தெரியாதநான் ஒருகுத்து மதிப்பில் திருச்சி வரைக்கும் போவோமே என்று டிக்கட் எடுத்திருந்தேன். கையில் தூக்கிய பெட்டியோடு வண்டி நிலையத்தையே ஒரு சுற்றுச் சுற்றினேன். நேரம் ஒரு மணியாகிவிட்டது. நடுச்சாமம். அந்த வண்டி நிலையத்துக்குள் நடுச்சாமமும் நடுப்பகலும் ஒன்றுதான். இரவு பகல் தெரியாத வெளிச்சம், அண்ணாமலை நகருக்கு எந்த வண்டியில் போக வேண்டுமென்பது எனக்குத்தெரியாது. நான் பிரயாணம் செய்த வண்டியிலேயே போயிருக்கக் கூடும் என்பதை நான் அறியவில்லை. பிரயாணிகளிற்பலர், படித்தவர் படியாதவர் என்ற வித்தியாசமில்லாத உலக அறிவு பெற்றிருந்தார்கள். இரண்டொருவரை வழி விசாரித்தேன், 'அண்ணாமலையா சார்? விடியக்காலை நாலரை மணிக்கு ஒரு வண்டி வருது சார். ஏவன்ரம் (திருவாங்கூர்) எக்பிரஸ். அதிலே ஏறிக்கிங்க சார்' என்டார் ஒருவர். இத்தகைய பதில் சர்வ சாதாரணம். இவற்றில் வழி அறிவதற்குரிய குறிப்பைவிட என்னை வழியனுப்புவதில் உள்ள உபசாரம் அதிகம் அதிலும் நீண்ட நெஞ்சு தெரிந்தது.

திருச்சியிலிருந்து இரண்டு வழியாக வண்டிகள் சென்னை செல்கின்றன. மாயவரம் ஊடாகச் செல்லும் வண்டிதான் சிதம்பரத்தில் இறக்கிவிடும், அண்ணாமலை நகர் சிதம்பரத்துக்குப் பக்கத்திலேதான் இருக்கிறது. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் என்பதில் உள்ள அண்ணாமலையைத் திருவண்ணாமலை என்றே அந்தக்காலத்தில் நினைத்திருந்தேன். பல்கலைக் கழகம் திருவண்ணாமலையில்தான் இருக்கவேண்டும் என்ற எண்ணம் வலுத்திருந்தது. எனது அன்றையநிலை, தெளிவில்லாத கற்பனையுலகு சஞ்சாரம் நடப்பது நடக்கட்டும், நடக்கிறது என்ற எண்ணம், என்னை ஏதோ அழைத்துச் செல்கிற தென்ற உணர்ச்சி தன்வயமற்ற நிலை. அண்ணாமலைக்கு டிக்கட் கொடுங்கள் என்று கேட்டேன். தூக்கக் கலக்கத்தைக் கலைத்து அவரும் டிக்கட் கொடுத்தார். அடுத்த நாள் திருவண்ணாமலையில் இறங்கினேன். திருவண்ணாமலையில் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் இல்லையே அடுத்த வண்டியில் சிதம்பரம் வந்து சேர்ந்தேன்.

''சிதம்பரம் போகாமல் இருப்பேனா", சிதம்பரத்தின் கோபுரங்கள் தூரத்தே தெரிந்தன. ''என்று வந்தாய் என்னும் எம்பெருமான் திருக்குறிப்பு" (எப்போது யாழ்ப்பாணத்திலிருந்து வந்தாய்?) ஆறுதல் தந்தது. வண்டியை விட்டு இறங்கிய நான், கூட்டத்தோடு கூட்டமாக நுழைந்து நெளிந்து வெளியேவந்தேன். வண்டி நிலையத்திற்குச் சிறிது தூரத்தே பாலமனாறு பாய்ந்துகொண்டிருந்தது. அது கோடையில் பாயாது படுத்துவிடும். அதன் மேல் போடப்பட்டிருக்கும் பாலத்தில் ஏறி நின்றேன். ஒருவர், மாணவத் தோற்றமுடையவர், கையில் சில புத்தகங்களுடன் எதிர்ப்புறத்தில் வந்து கொண்டிருந்தார். மெதுவாக அவரை அணுகி வழிகேட்டேன். ''அது அந்தப் புறத்திலே சார் எங்கூடவாங்க" என்று அழைத்தார். அந்த மாணவனுடைய இனிய பண்பு என்னை மிகவும் கவர்ந்தது. பிறருக்கு உதவுவதில் இயல்பாகவுள்ள இளகிய உள்ளம் அவர் பேச்சில் தொனித்தது. அவர் பெயர் தில்லைக் கோவிந்தன். தில்லையிலே (சிதம்பரத்தின் மறுபெயர்) நடராசா மாத்திரமா இருக்கிறார், கோவிந்தனும் துயில் கொள்கிறார்.

எனது வருகையின் காரணத்தைத் தெரிவித்தபோது அவர் ஆச்சரியப்பட்டார். எனக்கு அப்போது வயது 19 தான். வயதில் என்னைவிட மூத்தவராகக் காணப்பட்டார் அவர். வஞ்சகமில்லாமல் வளர்ந்திருந்தேன் நான். கல்லூரியில் சேருவது ஒருபுறமிருக்க, இன்னும் மூன்று நான்கு மாதங்கள் காத்திருக்கவேண்டுமே என்ற செய்தி என்னைத் துயர்ப்படுத்தியது. புகைவண்டிப் பாதையைக் குறுக்காகக் கடந்தோம். இதுதான் அண்ணாமலை நகர் என்றார். கருவேலமரங்களுக்கிடையே சென்ற ஒற்றையடிப்பாதை வழியே நடந்து சென்றோம். நாம் சென்ற இடம் கொத்தன் தோப்பு, கொத்தன் குடி, கொற்றவன் குடி, கொற்றவன் குடி உமாபதி சிவாசாரியார் வாழ்ந்த இடம். இவையெல்லாம், விரிவுரையாளர் விடுதிகள். இது, துணைவேந்தர் மாளிகை. அறிமுகஞ் செய்து கொண்டேபோனார் நண்பர் என்மனம் எதையும் ரசிக்கும் நிலையில் இல்லை. ஆனது சாப்பிட்டு எத்தனையோ நாள் களைத்துப் போயிருந்தேன். கல்லூரியில் சேரமுடியாதே உடனடியாக என்ற எண்ணம் குற்றுயிராக்கிவிட்டது. இருந்தாலும் பிரமாண்டமான கட்டிடங்களின் தோற்றம் என்னைப் பிரமிக் வைத்தது துணிவு பிறந்தது.

—தொடரும்.

# உயர் திருநாள்

—ஜீவா—

கங்குல்கி ழித்திடு தங்கக்க திரென்ன,
எங்கும்செ றிந்திருந்த—புவி
எங்கும்செ றிந்திருந்த,—துயர்,
பங்கம்வி ளைத்திடு பாவக்க றைநீக்கப்
பாரிலு தித்தனனே—குமரன்
பாரிலு தித்தனனே!

முன்னணை யில்லின்ற பாலனைக் கண்டுளம்
அன்னைம கிழ்ந்தனளே—மரி
அன்னைம கிழ்ந்தனளே—''இனி
என்ன, இருள்நீங்கும்'' என்று விண்ணோரெலாம்
ஏத்திவ ணங்கினரே—அவனை
ஏத்திவ ணங்கினரே!

இன்னல்கள் தன்னையெ திர்த்திட, இம்மியும்
தன்னுயிர் பேணவில்லை—அவன்
தன்னுயிர் பேணவில்லை—பிறர்
பண்ணிய பாவந்து டைத்தலே நோக்கெனும்
பாதையிற் சென்றனனே,—பரிசுத்த
பாதையிற் சென்றனனே!

போக்கினன் பாவம் துக்கினு னெம்வாழ்வு
தூக்கினன் சாவுமரம்—தானே
தூக்கினன் சாவுமரம்—அந்த
மேய்ப்பனு தித்தவு யர்திரு நாளிலே
வாழ்த்திவ ணங்குவமே—அவனை
வாழ்த்திவ ணங்குவமே!

# இலக்கியத்தில் காகம்.

ச. ப. ச.

'காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு' 'வேம்பன்றோ காக்கை யுவக்கும் கனி' 'மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டிற் காக்கை யுவக்கும பிணம்' என்றிவ்வாறு பழமொழியிலும் சில பாடல்களிலும் பழித்துரைக்கப்பட்ட காகத்தைப் புதுமைக் கவிஞர் பாரதியார், 'காக்கை குருவி எங்கள் ஜாதி' என்று பாடி உறவு கொண்டாடியதையும், 'எத்தித் திரியும அந்தக் காகம், அதற்கு இரக்கப்படவேணுமடி பாப்பா' என்று அனுதாபங் காட்டியதையுங் கண்டபோது, சாதாரண ரஸிகர்கள் வியப்படைந்தார்கள். 'இழிந்த காக்கைக்கும் இவ்வளவு அனுதாபமா? பாரதியாரின் விரிந்தநோக்கு, சமரச மனப்பான்மை என்னே! என்னே!!' என்று வியந்தார்கள். ஆனால் பழந்தமிழிலக்கியங்களை நன்கறிந்தவர்களோ இவ்வாறு வியப்புறவில்லை அதற்குப் பதிலாகப் பாரதியாரை 'நவீன காக்கை பாடியார்' என்று கூறிப்பாராட்டினார்கள் ஏனென்றால் காக்கையைப் பாடிய புலவர்கள் முன்னரே பலர் இருந்திருக்கிறார்கள். பழந்தமிழ்ப் புலவர்கள் உவமானமாக, உவமேயமாக, எடுத்துக்காட்டாக, இன்னும் பலவாறாகத் தமது பாடல்களிற் காகத்தைக் குறித்தும் பாடியிருக்கிறார்கள்.

நச்செள்ளையார் என்னும் பெயருடைய சங்ககாலப் பெண் புலவர் ஒருவர் காகத்தைப் பாடியமையால் 'காக்கைபாடினியார்' என்ற சிறப்புப் பெயரையே பெற்று விட்டார். இவரே முதன் முதல் காகத்தைப் புகழ்ந்து பாடிய கவிஞர் போலும. தலைவனைப் பிரிந்திருக்கும் ஒரு பெண், தனிமையால் வருந்தும் போது விருந்தினர் சிலா அங்கு வந்து சோந்தனர். அவர்களை வரவேற்று உபசரிப்பதில் அவள் தன் தனிமையை ஒருவாறு மறந்திருக்கமுடிந்தது. இதனால் விருந்தினர் வரப்போவதை முன்னமே தானுணருமாறு கரைந்து உபகாரம் செய்த காகத்தைப் போற்றுகிறாள்: 'நள்ளி யென்னும் அரசனது காட்டிலுள்ள பசுக்களின் நெய்யுடனே, தொண்டியில் விளைந்த வெண்ணெல்லின் சுடுசோற்றைக் கலந்து ஏழு பாத்திரங்களில் படைத்து வைத்தாலும், விருந்து வரக்கரைந்த இந்தக் காகத்திற்கு அது தகுந்த பிரதியுபகாரமாக மாட்டாதே,

தோழி!' என்ற கருத்தமைந்த

'திண்டேர் நள்ளி கானத் தண்டர்
பல்லாபயந்த நெய்யிற் றெண்டி
முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோறு
எழுகலத் தேந்தினும் சிறிதென் தோழி
பெருந்தோள் நெகிழ்த்த செல்லற்கு
விருந்து வரக்கரைந்த காக்கையது பலியே''

என்னும் இப்பாடலே காக்கை பாடினியார் பாடியது. இச் செய்யுள் சங்க நூல்களுள் ஒன்ருன குறுந்தொகையுள் தொகுக் கப்பட்டுள்ளது.

இளம் பெண்ணெருத்தி தன் காதலனேடு உடன்போக்கிற் சென்றுவிட்டாள். அவள் ஒரு சமயம் திரும்பி வரவுங் கூடு மென்று அவளுடைய தாயானவள் எதிர்பார்த்துக் காத்திருந் தாள். ஒரு நாள் வீட்டு வாயிலில் வந்திருந்த காகத்தைக் கண்ட போது 'இந்தக் காகம் கரையாதா! அதனுல் என் மகள் வந்து சேராளா!' என்று அங்கலாய்த்தாள். காகம் மௌனமாக இருந் தமையினுல் அதை நோக்கி இரந்து கேட்கின்ருள், 'காக்கையே, என் மகள் தன் காதலனுடன் இங்குவருமாறு கரைவாயாக. அவ் வாறு செய்தால் நீயும் உன் சுற்றமும் நிறைய உண்ண இறைச் சியும், சோறும் பொன் பாத்திரங்களிற் படைத்து வைப்பேன் என்கிருள்.

''மறுவில்தூவிச் சிறு கருங்காக்கை!
அன்புடைமரபின் நின்கிளையோடாரப்
பச்சூன் பெய்த பைந் நிறவல்சி
பொலம்புனை கலத்திற் றருகு வென்மாதோ
வெஞ்சின விறல்வேற் காளையொடு
அஞ்சிலோதியை வரக் கரைந்தீமே''

பெற்ற மனத்தின் பேதலிப்பை இச்செய்யுள் அழகாகக் காட்டுகிறது இது ஐங்குறுநூறு என்னும் சங்க நூலிற் காணப் படுவது. இந்த ஐங்குறுநூற்றின் நெய்தற்றிணைப் பகுதியில் தொடர்ந்து பத்துப் பாடல்களில் 'பெருங் கடற்கரையது சிறு வெண்சாக்கை' என்று காகம் குறிக்கப்பட்டிருக்கிறது. அதனுல் அப்பாடல்களுக்கு சிறு வெண்காக்கைப் பத்து என்றே பெயர் ஏற்பட்டு விட்டது.

உடன் போக்கிற் சென்ற தன் மகள் திரும்பி வரவேண்டு

மென விரும்பும் தாயானவள் காகத்தைக் கரையுமாறு கேட்பது கோவைப் பிரபந்தங்களிலுங் காணப்படுகின்ற செய்தி. இது, கொடிக் குறிபார்த்தல் என வழங்கும். காக்கைக்குக் கொடி என்ற பெயருமுண்டு. மூத்தாள் என வழங்கும் சேட்டா தேவிக்குக் கொடியாக அமைந்திருத்தலால் அதற்கு இப்பெயர் ஏற்பட்டது. 'குணங்களஞ்சாற் பொலியும் நல்ல சேட்டைக் குலக் கொடியே' என்று இதனைத் தெளிவாகவே வாதவூரடிகள் திருக்கோவையாரில் குறிப்பிடுகிறார். இதில் 'குணங்கள் அஞ்சு' என்று குறிப்பிட்டது கவனிக்கப்பட வேண்டியது.

பழம் பாடலொன்று காக்கையிடத்துக் காணப்படும் அருங்குணங்கள் ஐந்தை விதந்தெடுத்துக் காட்டுகின்றது. காகம் அதிகாலையில் நித்திரைவிட்டு எழுகிறது; உணவு கிடைத்தபோது தனித்துண்ணாமல் உற்றாரையு மழைத்து உடனுண்ணுகிறது; அவற்றின் வாழ்விலும் தாழ்விலும் பங்கு பற்றி அவற்றுடன் கலந்துறவாடுகிறது; நீராடித் தூயதாகி மாலை வேளையில் மனை சேர்கிறது; தன்மனையினுள்ளே பிறரறியாது காதல் புரிகிறது. இவற்றை மனிதரும் கற்றுக்கொள்ள வேண்டுமென்பது அப்பாடலின் கருத்து.

> "காலை யெழுந்திருத்தல் காணாமலே புணர்தல்
> மாலை குளித்து மனைபுகுதல்-ஏலவே
> உற்றாரோடுண்ணல் உறவாடல் இவ்வைந்தும்
> கற்றாயோ காக்கைக் குணம்.'

என்பது அப்பாடல். உற்றாரோடுண்ணும் உயர்ந்த குணத்தைக் காகம் ஒன்றுதான் தவறாது கைக்கொண்டிருக்கிறது. இந்த உண்மையை உணர்ந்தே பல நூற்றாண்டுகளுக்குமுன்னும், பின்னும் வாழ்ந்தவர்களான திருவள்ளுவரும் தாயுமானாரும் காகத்தை ஒரேவிதமாக எடுத்துக்காட்டாகக் கொண்டிருக்கிறார்கள். 'காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும் அன்ன நீரார்க்கே உள' என்பது வள்ளுவர்வாக்கு. 'காகமுறவுகலந்துண்ணக் கண்டீர்...... சேரவாரும் செகத்தீரே' என்பது தாயுமானார் திருவாக்கு.

பகற்காலத்தில் கூகை முதலிய வலிய பறவைகளை வென்றடக்கும் வன்மை வாய்ந்தது காகம். பகலொழிந்து இரவாய் விட்டாலோ அது வலியிழந்து அவற்றால்தான் வெல்லப்படும். ஆகையால், பகைவரை வெல்லச் செல்லும் அரசர், தமக்கேற்ற காலத்தையறிந்து செல்லவேண்டும் என்று திருவள்ளுவர் கூறுகின்றார். 'பகல்வெல்லுங் காக்கையைக் கூகையிகல் வெல்லும் வேந்தர்க்கு வேண்டும் பொழுது' என்பது வள்ளுவர் வாய்மொழி.

இப்பொய்யா மொழியைப் பொன்னே போற்போற்றிப் பின் வந்த கம்பரும் தம் நூலுள் சனகராசனுடைய பகைவர் 'அற்காக்கை கூகையைக் கண்டஞ்சினவாமென அகன்றார்' என்று அழகுறக் கூறுகின்றார்.

கம்பராமாயணத்துக்கு முற்பட்ட இலக்கியமாகிய சீவகசிந்தாமணியிலும் "கடத்திடைக் காக்கை ஒன்றே ஆயிரம்கோடி கூகை இடத்திடை அழுங்கச் சென்றாங்கின்னுயிர் செகுத்த தன்றே' என்று இவ்வுண்மை எடுத்தாளப்படுகிறது.

இதே பொருளை வில்லிபுத்தூராழ்வாரும் நன்கு கையாளுகின்றார். போர்க்களத்திற் குற்றுயிராய்க் கிடக்கும துரியோதனனிடம் சென்று இன்றே பாண்டவரைக் கொல்வேனென்று வஞ்சினங் கூறினான் அசுவத்தாமன். பின்பு அவன் கிருபனையும் கிருதனையும் உடனழைத்துப் பாண்டவர் பாசறை நோக்கிப் போகும் போது மாலை வேளையாயிற்று. வழியில் ஒரு மரக்கிளையில் பகல் முழுவதும் காக்கைகளால் துன்புற்ற கூகையொன்று, இரவானதும் அக்காக்கைகளைத் தான் துன்புறுத்தத் தொடங்கிற்று. இச் சம்பவத்தைக் கண்டனர் அசுவத்தாமனும் அவனுடன் வந்தோரும். இவ்வாறே தாமும் தம் பகைவரை யழிக்கத்தக்க தருணமறிந்து செல்ல வேண்டும் என்று தீர்மானித்தனர்.

'வேலமர் தடக்கை வீரரிப்பாடி வீடுசென்றணைதலும் புறத்தார், ஆலமர் சினையிற் பல் பெருங்காகம் அரும்பகல் கழித்த கூகையினால், சாலவுமிடருற்றலமரக் கண்டு தம்மிலே முகமுக நோக்கி, காலமுமிடமும் அறிந்தமர் செகுத்தல் கடனெனக் கருதினரன்றே' என்பது வில்லிபாரதம்.

பழமொழி நானூறு என்பது பழைய பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்று. அக் காலத்தில் வழங்கிய அரிய பழமொழிகள் நானூறு, ஒவ்வொரு வெண்பாவிலும் ஒவ்வொன்றாக அந்நூலில் அமைந்துள்ளன. அவற்றுள் 'ஆயிரங் காக்கைக்கு ஓர்கல்' என்பதும் ஒன்று. அளவற்ற காகங்கள் ஒருங்கு கூடியிருந்தாலும் அவற்றைத் துரத்த ஒரு சிறுகல்லே போதுமென்பது இதன் கருத்து. இறைவனது நாம மந்திரத்தின் முன்னே அளவற்ற பாபமும் வலியழிந்து போமெனக் கூற விரும்பிய தாயுமானாரும் இப்பழமொழிக் கருத்தையே விளக்கமாக 'காகமானவை கோடிகூடினும் ஒரு கல்லின் முன்னரெதிர் நிற்குமோ?' என்று சுவைபடச் சொல்லுகின்றார்.

'காகத்திற்கு இரண்டு கண்களிருந்த போதிலும் பார்க்கின்ற

கண்மணி ஒன்றுதானுண்டு. அதுபோலவே காதலனும் காதலியும வேறு வேருயிருந்தாலும் இருவருடலிலும் உலவுகின்ற உயிர் ஒன்றுதான்' என்று தோழியொருத்தி கூறுகின்ருள்.

"காகத்து இருகண்ணுக்கு ஒன்றே மணிகலந் தாங்கிருவர்
ஆகத்துள் ஒருயிர் கண்டனம் யாம்"

என்ற இந்த அழகிய உவமை மணிவாசகப் பெருமான் அருளிய திருக்கோவையாரில் திகழுகின்றது.

'முக்காலும் காகம் முழுகிக் குளித்தாலும் வெள்ளைக் கொக்காகுமா?'

என்ற விஞவை யாப்பருங்கலக்காரிகை யாசிரியரிடம் விஞவிஞல் 'ஆகும' என்றுதான் அவர் விடையளிப்பார். வெண்ணிறம் மட்டுமல்ல, பொன்னிறமே பெற்றுவிடலாம். அதற்கு வழி தண்ணீரில் குளிப்பதல்ல. தன்னைச் சேர்ந்த எப்பொருளையும் பொன்மயமாக்குகிற பொன்மலையைச் சேருவதுதான் அதற்குத் தகுந்த வழி என்பார் அவர்.

'பொன்மாலிமயப் பொருப்பகஞ்சார்ந்த பொல்லாக் கருங்
காக்கையும் பொன்னிறமாய் இருக்கு மென்றிவ்வாறுரைக்கு
மன்ருே இவ்விருநிலமே'

என்று யாப்பருங் கலக்காரிகை கூறுகிறது.

இப்படி நிறம் மாறி மாறுவேடம் பூண்ட காக்கைகளைக் களவழி என்ற சிறு நூலிலும் நாம் காணலாம். சோழன் செங்கணுன், தன் பகைவரைப் போர்க்களத்திற் கொன்று குவித்தான். பிணமலைகளினிடையே இரத்த ஆறுபாய்ந்தது' அந்த இரத்தத்திலே படிந்தெழுந்த காகங்கள் பார்ப்பவர்க்கு வியப்பளித்தன. ஏனெனில் வாயைப்பார்த்தால் அவற்றை மீன் கொத்தி என்று சொல்லவேண்டும். முதுகைச்-சிறகைப்-பார்த்தாலோ செம்போத்து-செம்பகம் என்று கூறவேண்டியிருக்கிறது!

'தெரிகணை யெஃகந் திறந்த வாயெல்லாம், குருதி படிந்
துண்ட காகம்-உருவிழந்து, குக்கிற் புறத்த சிரல் வாய செங்
கண்மால், தப்பியாரட்ட களத்து'

என்பது களவழிச் செய்யுள்.

உலகப் பிரசித்தி பெற்ற பஞ்சதந்திரம், இதோபதேசம் என்னும் இரு நீதி நூல்களையும் பார்த்தால், அவற்றிலும் காகம்

கதாபாத்திரமாயமைந்த கதைகள் பலவாகும். பஞ்சதந்திரத்தில் ஒரு தந்திரத்துக்கு காகோலூ கீயம்-அதாவது காகமும் கூகையும் என்று பெயர். இதோப தேசத்தில் வரும் இலகுபதனன் என்ற காகத்தின் பேச்சும் செயலும் பண்டைய சரித்திரத்திலும் இக் காலத்திலுமுள்ள சில இராஜ தந்திரிகளை நினைவூட்டுவன:

புராணங்களிலும், இதிகாசங்களிலும், கிராமியக் கவிதை களிலும் கதைகளிலும் எல்லாம் காகம் இடம் பெற்றேயிருக் கிறது. காகத்துக்குப் புராணப் பிரசித்தம் இருக்கிறபடியால் தான் இன்று அது சனிக்கிழமை தோறும்-சிறப்பாகப் புரட்டாதிச் சனிக்கிழமை தோறும்-வருந்தியழைத்து உணவூட்டப்படுகிறது.

நாம் சின்னஞ்சிறு வயதில் கேட்டு மகிழ்ந்த காகமும் குட மும், காகமும் நரியும் என்னுங் கதைகளும், 'காக்காய்க் குஞ்சுக் குக் கலியாணம்' என்ற பாட்டும் சிறுவரிலக்கியத்திலும் காகம், இடம் பெற்றிருப்பதைக் காட்டுகின்றன.

இனி இக்காலக் கவிஞருள்ளே நவாலியூர் சோமசுந்தரப் புலவர் தமது பிரசித்திபெற்ற 'கத்தரி வெருளி'ப் பாட்டில்

'கள்ளக் குணமுள்ள காக்கையுனைக் கண்டு
கத்திக் கத்திக் கரைந்தோடுமே'

என்று வேறொருவகையில் காகத்தைக் குறிப்பிடுகிறார். இக் காலக் 'காக்கை பாடக'ருள் பரலி சு. நெல்லையப்பர் ஒருவர். பாரதியாரால் தமது கடிதங்களில் 'தம்பி' என்று அன்புடன் அழைக்கப்பட்டவர். இவர் பாடிய சில பாடல்களுள் 'காற்று வாங்கும் காக்கை' உயர்ந்த கருத்தமைந்து பாரதியாரின் 'சிட் டுக் குருவி'யை நினை வூட்டுகின்றது. அதில் ஒரு பகுதி பின் வருமாறு:

'பச்சைப் பசேரென்ற கிளையில்-மிகப்
பாங்காயிருந்திடும் காக்கை!
இச்சையொன்றுண்டதைச் சொல்வேன்-இந்த
ஈன உலகினை விட்டே
பச்சைப் பறவையொன்றாகி-நான்
பாரெங்கும் உலவிடவேண்டும்
துச்சமா மக்களை விட்டு-நான்
தூரவிலகிட வேண்டும்
நானும் உன்போலொரு புள்ளாய்-இந்த
ஞாலத்தில் வாழ்ந்திட வேண்டும்

மானிடர் வாழ்க்கையை வெண்டேன்-உன்போல்
வானத்தில் வாழ்ந்திடவேண்டும்
ஞானத்தின் உருவான தேவை-நான்
நாள் தோறும் பாடிடவேண்டும்
கானத்தில் கலந்தெங்கும் ஆடி-நான்
கடவுளர் வாழ்வுற வேண்டும்.'

இவ்வாறு, காகம், வெளியுலகிலே நாட்டிலும் நகரிலும் வீட்டிலும் வெளியிலும் எங்கும் வியாபித்திருப்பது போலவே இலக்கியத்திலும் அது சர்வ வியாபியாயிருக்கிறது.

## சந்தா நேயர்களுக்கு!

அடுத்த ஆண்டிலிருந்து தை மாதம் தொடக்கம் மார்கழி மாதம் முடிய சந்தாத் தொகை கணக்கிடப்படும். ஆகவே இந்த இதழை கலை : 2, காட்சி 11-12 என்று குறிப்பிட்டுள்ளோம். நிர்வாக சௌகரியத்திற்காக நாம் ஏற்படுத்திய இந்த மாறுதலை நேயர்கள் வரவேற்பார்கள் என நம்புகின்றோம். பல புதிய அம்சங்கள் அடுத்த ஆண்டில் இடம்பெறுகின்றன. மூன்று விசேட மலர்களும் (பொங்கல், புதுவருடம், தீபாவளி) வெளியாகும்.

எந்தப் பத்திரிகையென்றாலும் சந்தாவை முற்பணமாகவே வசூலித்து விடுகின்றது. ஆனால் நாம் அப்படிச் செய்யவில்லை. இப்பொழுது நடைபெறுகின்ற இரண்டாவது ஆண்டிற்குரிய சந்தாப் பணத்தை அனுப்பாதவர்கட்கும் பத்திரிகையை ஒழுங்காக அனுப்பி வருகின்றோம். ஆகவே இரண்டாவது ஆண்டு இனிதே நிறைவேறுகின்ற இந்த நேரத்தில் உங்களைப் பணிவுடன் நாம் கேட்டுக் கொள்வன:-

1. இரண்டாவது ஆண்டுச் சந்தா 4/-ரூபாவை உடனே அனுப்புங்கள்.
2. முடியுமானால், அடுத்த ஆண்டுச்சந்தாத் தொகையையும் சேர்த்து 8/- ரூபாவை அனுப்புங்கள்.
3. உங்கள் நண்பர்கள், உறவினர்கள், உங்கள் ஊரிலுள்ள தமிழார்வம் மிக்க பெரியோர்கள் ஆகியோரிடம் 'கலைச்செல்வி' பற்றிப் பேசி, சந்தாப் பணம் வாங்கியனுப்புங்கள்.

'கலைச்செல்வி' தொடர்ந்து இலக்கியப் பணி செய்ய வேண்டும் என்று நாம் மனதார விரும்புவதால் இந்த வேண்டுகோளை விடுக்கின்றோம்.

உங்கள் சேவை கலைச்செல்விக்குத் தேவை.
கலைச்செல்வியின் சேவை நாட்டுக்குத் தேவை.

நிர்வாகி, "கலைச்செல்வி", கந்தரோடை, சுன்னாகம்.
என்ற முகவரிக்குப் பணத்தை அனுப்புங்கள்.

யா. த. இ. மன்றத்தினர்.
சுன்னாகம்.

1-12-1960

ஐப்பசி இதழ் 20ம் பக்கத் தொடர்ச்சி

# ஓவியக்கலை

க. இராசரத்தினம்

புதுமை ஓவியர்கள் புதுமை ஓவியக்கலையை, இந்திய, சீன, ஆபிரிக்க நீக்ரோ, ஆகியோரின் கலையின் தத்துவங்களுடன் புதுப்பித்து பிரபல்யமடையச் செய்யத்தொடங்கினர்.

இவ்வியக்கம் மேலும் சில மாறுதல் அடைந்தது. இதிலே 'போல் சிசானே'(Paul Cezanne 1839-1906) என்பவர் எல்லா இயற்கை உருவங்களையும் உருண்டை, உருளை கனவடிவம் முதலிய உருவங்களால் அமைத்துவிடலாம் என ஓவியமூலம் நிரூபித்தார். இவரின் கொள்கைகளைக் கடைப்பிடித்து பாப்லோ பிக்காசோ (Pablo Picasso, b. 1881) என்பவர் உலகிலே காணும் எல்லா உருவங்களையும் அவற்றின் நுண் அமைப்பைக் களைந்துவிட்டு எளிய முறையில் அவைகளைச் சங்கீத ஸ்வர ஆரோஹண, அவரோஹண அமைப்பைப் போன்று (Musical Variations) அமைக்கலாமென்று உணர்ந்து நடை முறையிற் கொண்டு வந்தார். மேலும் இவருடைய ஓவியங்கள் தற்போது ஒருவராலும் விளங்கிக் கொள்ள 'முடியாத' நிலையை அடைந்துள்ளன.

∴ ∴ ∴

'கலையின் இன்றைய நிலை' என்னும் விடயத்தில் உள் உணர்வை வெளிக்காட்டல் என்பது பற்றிக் ஹார்வேடே அழகுற எடுத்துக் கூறினர்கள். அது பின்வருமாறு.-

சமீபகால யுத்தத்திற்கு முன்னர் இயல் வாய்மை (Surrealist) ஆதரவாளர்களும் (போலி) ''முன்னேற்ற'' ஓவியக் குழுவினரும் தோன்றியிருந்த போதிலும், வர்ணத்தையும் தூர பேதத்தையும் விளங்கி மெச்சும் ஆற்றல், சொற்ப தொழில் நுட்ப வல்லமை, தெளிவற்ற முறையில் கூறப்படும் கலைத்திறமை ஆகிய வற்றை அக்கால கலைஞர் உடையோராக இருக்கவேண்டிய நிர்ப்பந்தம் நிலவியது. ஆனால் தற்போது இந்நிலை மாறிவிட்டது.

லண்டன் ''ரோயல் கலைமன்றக்'' கூட்டத்தில் விரிவுரை நிகழ்த்திய தலைவர் ''சேர் சால்ஸ் உவீலர்'' (Sir Charles Wheeler) பேசுகையில் ''அம்மணப்பெண்மேல் வர்ணங்களைப் பூசி அவளை கலையகத் திரையின்மேல் (Canvas) உருளும்படி செய்கிறான் 'ஓவியன்' என்று அழைக்கப்படுபவன். அப் பெண் உருண்டு எழுந்தால் உண்டான ''ஓவியம்'' என அழைக்கப்படும் அடையாளத்தை கலைநேர்மை அற்றதென அவமதித்து, இது ஒரு தற்காலத் தந்திரமெனக் கூறவேண்டும். இத்தகைய ''ஓவியங்களை''க் கொண்ட காட்சி யொன்று பாரிஸ் நகரில் நடைபெறவிருக்கிறது என அறிகிறேன். இவ்வித நகைப்பிற்கிடமான அர்த்தமற்ற சாதனைகளுக்கு ஓர் முடிவே இல்லையா?'' என்று ஆணித்தரமாகக் கூறியுள்ளார்.

''தற்கால ஓவியம் என்று அழைக்கப்படும்; ''அபூர்வக்கலை'' நடமாடும் இந்நாட்களில், சில காலத்திற்கு முன் தீட்டப்பெற்ற திறமை வாய்ந்த ஓவியங்களும் 'பழையன', போன்ற இழி சொற்களால் இகழப்படுகின்றன.

பாரதூரமான பொருளடக்கத்தைக்கொண்ட நூல்களை வாசிப்பதும், சிரமமெடுத்து கல்வியைப் பயில்வதும் களைப்பைத் தரக் கூடிய முயற்சிகள் என்று இளைஞர்கள் கருதுகின்றனர். சித்திரெய்து வதற்கு அவர்கள் குறுகிய, இலேசான செய்கை முறைகளையே விரும்பிக் கோருகின்றனர். அத்தகைய முறைகள் ஓவியக்கலையில் மலிந்து கிடக்கின்றன. செயற்சித்திரம் (Action Paint ing) அவற்றுள் ஒன்றாகும். கலைஞன் திரைச்சீலையை நிலத்தில் வைத்து அதன்மேல் தாராளமாக வண்ணம் பூசுவான். ஒரு துவிச்சக்கரத்தை அதன்மேற் செலுத்தியோ, அல்லது சப்பாத்துக் கால்களுடன் அதிற் துள்ளி மிதித்தோ தன் உள் ஆற்றலை வெளிப்படையாக்குவான். அதொரு "மெச்சக்கூடிய" சாதனை தான். ஏனெனில், உள் ஆற்றல் புலப்படுவதை நான் ஆதரிக்கிறேன். ஆனல், அறியாமையுள்ள, உணர்ச்சி அற்ற என்னைப் போன்ற மக்கள் அவ்வித படங்களை அமோகவிலை கொடுத்து கொள்வனவு செய்யாத சந்தர்ப்பத்தில், அக்கலைஞன் விசன மடைந்து, விதி தனக்கு பகைமை காட்டுகின்றதென்று புலம்புதல் முறையல்ல.

இயற்கையில் ஒரு குதிரையைப் பார்த்து எங்ஙனம் மகிழ்கிறேமோ அங்ஙனமே நாம் அதன் படத்தையும் பாராட்டத்தக்கதாக இருத்தல் வேண்டும். குதிரைப்பட மொன்று குதிரையை மாத்திரம் சந்தேகத்திற் கிடமில்லாமல் காட்ட வேண்டுமென்று வாதாடும் பழமை தழுவும் நபர்களில் நானும் ஒருவன். அதன் காரணமாகவே சேர் அல்பிரட் மணிங்ஸ் (Sir Alfred Munnings) அவர்கள் தீட்டியிருக்கும் குதிரைச் சித்திரங்கள் என் மனதைக் கவருகின்றன. இலட்சக்கணக்கான மக்கள் விரும்பும் பிரகாரம் குதிரை முகத்திற்கு இருமருங்கிலும் கண்கள் காணப்பட வேண்டும். ஆனல் டாலி என்னும் கலைஞர் ஒருபக்கத்தில் மாத்திரம் அவற்றைத் தீட்டிவிடுவார். அதை அவமதிக்கும் என்னை அவர்போன்ற கலைஞர்கள் பண்பிலாதான் என்று இகழக் கூடும்.

றெம் பிருன்ட் (Rembrandt) என்னும் கலைஞரைப் பாராட்டாதவர்கள் உலகில் இல்லை. பாவிக்கப் படாத மேல்மாடி அறை ஒன்றில் றெம்பிருன்ட் என்பவரால் தீட்டப் பட்ட படமொன்று கவனிக்கப்படாம லிருப்பதை கலை நிபுணர்கள் அறிந்து அவருடையது என நிச்சயம் செய்து விட்டால் கோடீஸ்வரர்கள் பலர் அதை கொள்வனவு செய்வதற்குப் போட்டி போடுவது சகசம். அதன் கிரயம் வானளாவிய விலைக் கட்டத்திற்கு உயர்ந்து அப் பெரியார் தம் வாழ்நாட்கள் முழுவதிலும் வறியவராயிருந்து தம்மால் வரையப் பெற்ற படங்களுக்காகப் பெற்றுள்ள தொகையிலும் பார்க்க பல நூறு மடங்கு அதிகரித்து விடுமென்று சொன்னல் அது மிகையாகாது. தமது உணவின் கிரயத்தைக் கொடுப்பதற்கு அவர் ஒரு நாள் ஒரு பீப்பாவின் மேல்மூடியில் ஒரு படத்தை வரைந்தார் என்றும், அதேபடம் பிற்காலத்தில், அதாவது சுமார் 25 வருடங்களுக்குமுன் ஏறக்குறைய $2\frac{1}{2}$ இலட்சம் ரூபாய்க்கு விற்கப்பட்டது என்றுந் தெரிய வருகிறது.

டியூர் (Durer) என்னும் சித்திரக் கலைஞர் வரைந்துள்ள கைகளின் படங்கள் மிகவுந் திறமையானவை. நுணுக்கமான முறையில் அவைகள் கலைஞரின் உள்ளாற்றலை எடுத்துக் காட்டுந்தன்மை வாய்ந்தவை. தற்காலத்தில் அவற்றை விரும்பி வாங்கும் படம் சேகரிப்பவர்களின் தொகை அமோகமாய் குறைந்துபோனது. அவருடைய படங்கள் உள்ளதை உள்ளவாறு காட்டுகின்றன வென்றும் பிழையின்றிய புகைப்படத் திறமையுள்ளன

வென்றும் இக்காலச் சித்திரக்கலை விமர்சனம் கூறுவதே இக் கேவலமான நிலைமையின் நேரடியான காரணம்.

ஓவியக்கலையில் தற்போது தோன்றியிருக்கும் பித்தலாட்டம் போல், வேறெந்தக்கலையிலும் மதிமயக்கம் காணப்படவில்லை.

ஆனால், இளஞ்சித்திரக் கலைஞர்கள் பயிற்சி பெற்று முன்னேறுவதற்கான வசதிகள் தற்காலத்தில் அவர்களுக்குக் கிடைக்கின்றன. இதன் விளைவாக அவர்களிற் சிலர் உலக வரலாற்றில் முன்னெருபோதுமில்லாத சாமர்த்தியத்துடன் படங்களை வரையவுங் கூடும். கலைஞர்களில் அனேகர் தங்கள் ஆற்றல் திறமையை அபிவிருத்தி செய்வதற்கும், உபகாரச்சம்பளம் பெற்று பாரிஸ் நகரிலும், உரோமாபுரியிலும் உயர் கலை பயிலவும் சிரமமெடுத்துப் படிக்கின்றனர். இயற்கையாக ஒருவருக்கு அமைந்துள்ள உள்ளார்ந்த வல்லமையை அபிவிருத்தி செய்யப் பிரஸ்தாப நகரங்களில் வசதிகளுண்டு. அவர்கள் அதிர்ஷ்ட சாலிகளாக விருந்தால், அவர்களின் முயற்சி இலாபகரமானதாக முடியும். இல்லாவிடின் ஆசிரியத் தொழிலில், அல்லது வர்த்தக சித்திர வேலையில் அவர்கள் ஈடுபடத் தங்கள் விருப்பத்திற்கேற்றபணியைச் செய்ய மூலதனத்தைத்தேடிக் கொள்வர்.

பண்டைக்காலத்தில் பிரபல்யமான கலைஞர்கள் நிதிபடைத்த போஷகர்களின் ஆதரவில் கடமையாற்றினர் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

விரைவில் புகழ்பெற்று வாழ்வதில் மோகங்கொண்ட சித்திரக் கலைஞர்களே இவ் விஷயத்தில் பேரிடராய் விளங்குகின்றனர். சித்திரக் கலைக்கு அபகீர்த்தி தேடுவோரும், அதன் தரத்தைக் குறைப்போரும் அவர்களே. தங்கள் நண்பர்களுக்குக் காட்டிப் பெருமை பாராட்டுவதற்கு இலகுவாய் மன எழுச்சி தரக் கூடிய படங்களை விரும்பும் பணக்காரப் பெண்கள், இலாபத்தில் மாத்திரம் கண்வைக்கும் வியாபாரிகள் ஆகியோரின் உற்சாகத்திலும், ஆதரவிலும் அவர்கள் நம்பிக்கை வைக்கின்றனர்.

திறமை வாய்ந்த படமொன்றைத் தயாரிப்பதிலும் பார்க்க, அர்த்த புஷ்டியுடைய கேவலமான படத்தைத் தீட்டுவது மிகவும் சுலபமானதென்று போலிக்கலைஞருக்கு நன்கு தெரியும். அதிக நேரத்தை எடுப்பதும், பூர்த்தி செய்ய ஆற்றல் திறமை தேவைப்படுவதுமான ஓவியமொன்றைத் தீட்டுவது வீணென்றும், அற்ப கவனத்துடன் வண்ணம் பூசி முடிக்கும் படத்தை அதிக விலைக்கு விற்பனவு செய்யலாமென்றும் அவ்வித போலிக் கலைஞர்கள் கருதுகின்றனர். இது மதியற்ரேரின் செயலில்லையா?

சில காலத்திற்குமுன் மேற்படி கலைஞர்களிலொருவன் தம் நண்பருடன் தொலை பேசி மூலம் கதைத்து, அன்று அவரோடு சமுகங் கொடுக்க வேண்டிய விருந்தொன்றை ரத்துச் செய்து விட்டாராம். அவர் சொன்னதாவது:- "இன்றிரவு நடைபெற விருக்கும் சித்திரக் காட்சிக்கு இன்னும் நான் ஆறு படங்களைத் தயாரிக்க வேண்டியதாக விருக்கிறது." எப்படி?

பிரான்சு தேசத்தவராகிய டாக்டர் ஏலிபொன் ஸொலாக்ஸ் (Dr. Elie Bontzolakis) பின் வரும் அர்த்தம் நிரம்பிய அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறுர்:- 'பண்பியலான (Abstract) ஓவியக் கலைஞர்கள் நால்வரில் மூவர் நரம்பு விறைப்பு (Nervous Tension) கூடிய இரத்தக் கொதிப்பு. வீங்கிய இரத்தாசியம்' ஆகிய நோய்களால் பீடிக்கப்பட்டிருக்கின்றனர். பண்பியல் எவ்வளவிற்கு அதிகரிக்கிறதோ, அவ்வள

வுக்குப் பிணிக் கோளாறுகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கும். பாரீஸ் நகரிலுள்ள மிகவும் கீர்த்தி வாய்ந்த பண்பியற் கலைஞர்களி லொருவர் மோசமான நரம்பு விறைப்பால் (Hypertension) கஷ்டமுறுகிறார். பிக்காசோ எனும் ஓவிய மேதாவி அதிலும் கூடிய அபாய முள்ள நோய்வாய்ப் பட்டுள்ளார் (Arterio-Sclerotic & Hypertension) ஆனால் அவருடைய படங்களைப் பார்க்கும் பொது மக்களை அவர் அதற்காக வருத்துவது முறையோ?

புராதன காலத்தில் ஒருவர் மேதாவியென்று மதிக்கப்படுவதற்குத் தம் வாழ்நாள் முழுவதுமே கஷ்டப் பட்டு உழைக்க வேண்டியதாக இருந்தது. ஆனால் ஆறு வயதான ஸ்பானியக் கலைஞரும், "பீப்" என்று அழைக்கப்பட்டவருமான 'ஜோஸ் கொன் சாலஸ்' என்பவருக்கு இவ் விதத்தேவை ஏற்படவில்லை. வாசிக்கவும் எழுதவும் அவருக்குத் தெரியாது. ஓவியக்கலையில் ஒருபாடமேனும் அவர் கற்றுக் கொள்ள வில்லை. எனினும், அவர் தீட்டிய படங்களில் இருபத்து மூன்றைக் கொண்ட பொருட்காட்சி யொன்றை 'மாட்றிட்' என்னும், நகரத்திலுள்ளோர் பித்தலாட்டத்துடன் ரசித்தனராம். அதை ஒரு தீவிரப் பிரசாரகர் (Publicity Hounds) ஒழுங்கு செய்திருந்தார்.

அக்கலைஞரின் படங்களுக்கும் பொருத்தமோதொடர்போ காணப்பட வில்லை. தலையங்கங்கள் பின்யோசனையின் (After-Thought) பெறு பேறுகளாக அமைந்திருந்தன. 'காற்றாடிகளைத் தலையிலணிந்திருக்கும் சிறுமி', "நல்ல தேங்காய்கள்", "அதிக பழுதடைந்த தேங்காய்கள்" ஆகியன அவற்றுட்சில.

"கலைஞன்" தன் உள்ளாற்றலை வெளிப்படுத்தும் நோக்கமுடையோனாக இருக்கிறேனென்றும் சாக்குப் போக்கைச் சொல்லக்கூடும். தாம் வரையும் படம் எதைக்குறிப்பிடுகிற

## 'விழல்' ஆராய்ச்சிகள்

1. யாழ்ப்பாணம் இலங்கைப் படத்தின். தலைப்பக்கத்தில் உள்ளது. யாழ்ப்பாணம் ஒரு பட்டினம். ஆகவே இலங்கையின் 'தலைப்பட்டினம்' ..........யாழ்ப்பாணம்

2. 'விருந்து வந்ததென விளம்ப சாடினாள் பழமுறத்தால் ஓட ஓட......" என்று ஔவை பாடியிருக்கிறாரே! அப்பெண் ஏன் பழமுறத்தால் சாடினாள் தெரியுமா? அவள் கையில் அப்போது உலக்கையோ, அரிவாளோ இல்லாததால்தான்.

3. பாராளுமன்றப் பிரதிநிதிகள் அங்கே (பாராளுமன்றத்தில்) கத்துவதால்தான் அவர்களை 'அங்கத்தவர்கள்' என அழைக்கிறார்களோ?

4. சில மாணவர்கள் பரீட்சையில் 'சைபர்" வாங்குவது உலகம் உருண்டை என்பதை ஆசிரியர் மறந்து போகாமலிருப்பதற்காக.

5. தெருவில் செல்லும் போது கணவன் முன்னும் மனைவி பின்னுமாகச் சென்றால் மனைவி கணவனை ஆட்டி வைக்கிறவள் என்பது தெரிகின்றது. மாடு முன்னே போனால் அதை ஓட்டுபவன் பின்னேதானே இருக்கிறான்.

6. கால மெல்லாம் 'சிடு சிடு" என்று வாழ்ந்தவர் ஒருநாள் சந்தோஷமாக இருக்கிறார் என்றால் அவரது மனைவி தாய் வீட்டுக்கோ எங்கோ போயிருக்க வேண்டும்.

7. பெண்ணால் இறந்தவர்கள் பலர்; பேயால் இறந்தவர்களும் பலர்; ஆதலால் பெண்ணும் பேயும் ஒன்றுதானே! —துருவன்,

தென்று விளங்கிக் கொண்டால் போதும் என்றும், வேறெந்தக் கரிசனையும் தமக்குத் தேவையில்லை யென்றும் அவன் தெரிவிப்பது வழக்கம். அதைக் கொள்வனவு செய்பவன், பாவம், அவன் பணத்தைச் செலுத்த வேண்டியது தான். தனது உள்ளாற்றலைப் பகிரங்கப் படுத்தும் கலைஞன் இயல்பிழுக் குடையோனுக (Freak) உடையணிந்து, துறவிபோற் காட்சி யளித்து, ஒரு புறக்கணிக்கப்பட்ட அறையில் கேவலமான வாழ்க்கையை நடத்தி, இதர மக்கள் தன் மனோபாவத்தை விளங்கிக் கொள்ளாததையிட்டுச் சுய இரக்கம் என்னும் துயர் கடலில் மாண்டு போவான்.

மற்றவர்களுக்கும் மனப்பாங்கு உண்டுதான். ஆனல் அவர்கள் அதைக் கட்டுப்படுத்திக் கொள்ளுவார்கள். உண்மையான கலைஞன் ஒரு வணிகனைப்போல ஆடையணிந்து தோற்றமளிப்பான். ஏனையோரிலும் பார்க்க அவன் கூடிய சிரமத்துடன் வேலைசெய்து, தன் சீவிய காலம் முழுவதும் தனது பிரத்தியேக வல்லமையை நிறைவு படுத்துவான். அவன் உண்மை, அழகு ஆகியவற்றைத் தேடிக் கண்டடைய வேண்டியதாயிருத்தலால், மனப் பாங்கின் அடிமையாக அவன் வாழமுடியாது. அவனல் தயாரிக்கப்பட்ட சித்திரச்சாதனைகளை நாம் வாங்கி, அவனுக்கு அஞ்சலி செய்வதே எங்கள் கடமையாகும்."

∴ ∴ ∴

இவர் கூற்றை ஆராயுமிடத்து 'கலை' என்பது எல்லோராலும் விளங்கி அனுபவிக்க வேண்டிய ஓர் பொக்கிஷம். அதைக் கண்டபடி சிதைத்து 'எனக்கு விளங்குகிறது; உனக்கு விளங்காவிடில் போ உன்பாட்டில்' என்ற அர்த்தரீதியுடன் தொண்டாற்றும் அற்பர்கள் 'அழிக்கப்பட வேண்டும்', என்றும் ''இயற்கை எழிலை கலைவளம்'' அதைப் போற்றிப் புகழ்ந்து வளர்ப்போரை ஆதரித்து வாழவிடவேண்டும்" என்றும் விளங்குகிறது.

சொல்லால் விளக்கமுடியாத எத்தனையோ விடயங்களில் ஓவியம் தலைகொடுத்து மிக இலகுவில் விளக்கி விடுகிறது. தன்மன எழுச்சியை வெளிக்காட்டும் படம் எனக் கூறிக்கொண்டு மற்றவர்களுக்கு விளங்காத படங்களை வரைவது ஓட்டைச் சிரட்டையை அமுதசுரபி என்பது போலாகுமல்லவா? சில மேதாவிகளின் எண்ணப்படி ஒருவனுடைய உணவு மற்றவனுக்கு நஞ்சாகுமோ? அப்படியாயின் 'பொலிடோல்' அமிர்தமாகவும், தேன் கசப்பாகவும் நஞ்சாகவும் ஆகவேண்டுமே!...... (தொடரும்)

## எண்ணமும் இன்பமும்

(ச. வே. பஞ்சாட்சரம்)

தட்டிற் கனியொடு, வண்ணமுடியினில்
தாங்கி முகில், வரும் காரிகையாள்
விட்டு உணவினை விட்டு நினைவுகள்
விஞ்ச இறைவனை எண்ணியதே
பட்டு நிறத்தனை முட்டு மரக்கிளைப்
பட்டு மகிழ்பவை நோக்கி இமை
கொட்ட மறக்கவும் ஈசன்படைப்பினிற்
கோலந்திளைக்கவும் காரணமாம்.

(அட்டைப்படக் கவிதை)

குழந்தைகளின் குறும்புச் சிரிப்பை
பெண்களின் இயற்கை எழிலை
திருமணக் காட்சிகளை

உயிரோவியமாக்கித்
தருகின்றோம்.

பிறின் பிறின்ஸ்

(உரிமையாளர் : M. நடராஜா)

கே. கே. எஸ். வீதி :: சுன்னுகம்.

# அறிவு வளர்ச்சிப் போட்டி இல : 6

## சரியான விடையும் பரிசு பெற்றோர் விபரங்களும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ச | ங் | 2 கி | 3 லி | ய | 4 ன் |
| ங் | ■ | 5 ரா | கி | ■ | ர |
| 6 கீ | ர | ம் | ■ | ■ | மா |
| 7 த | ற் | பு | 8 க | ழ் | ■ |
| ம் | ■ | ■ | 9 த | கை | மை |
| ■ | 10 உ | ள | வு | ■ | ■ |

ஆயிரக் கணக்கானோர் பங்கு பற்றிய இந்தப்போட்டியில் எவராவது சரியான விடையை அனுப்பவில்லை. ஆகவே முதலாவது பரிசு எவருக்கும் அளிக்கப்படவில்லை. பத்துப் பேர் இரண்டு பிழைகளுடன் விடை யனுப்பியிருந்தனர். திருவுளச் சீட்டுப் படி கீழ்க்கண்ட ஐந்து பேருக்கும் இரண்டாம் பரிசுத் தொகையாகிய 10 –ரூபா, தலைக்கு 2/-ரூபா வீதம் பகிர்ந்தளிக்கப்படுகின்றது.

1. A. M. ஜெமில்,
ஏருவூர் சிரேஷ்ட பாடசாலை,
ஏருவூர்.

2. ம. நவரத்தினம்
த. பெ. எண். 577,
கொழும்பு.

3. செ. பாலபாஸ்கரன்,
வரிசப்பிலம்,
சுன்னுகம்.

4. க செல்வவிநாயகமூர்த்தி,
இணுவில் மேற்கு,
சுன்னுகம்.

5. சி. ஏரம்பமூர்த்தி,
திமில தீவு,
மட்டக்களப்பு.

இரண்டு பிழைகளுடன் விடையனுப்பிய ஏனையோர்:-

1. லோகராணி தர்மலிங்கம், கச்சேரி-நல்லூர் தெரு, யாழ்ப்பாணம். 2. தெ. இந்திரக்குமார். கோண்டாவில். 3. கோ. தயாநிதி, ஸ்ரீலங்கா வித்தியாசாலை, அல்வாய். 4. சீ. சிவஞானசுந்தரம், ஏழாலை மேற்கு, சுன்னுகம், 5. க. பார்வதி, 'இராசபவனம்', 1ம் குறிச்சி ஆரையம்பதி.

மூன்று பிழைகளுடன் விடையனுப்பியோர்:-

1. ஞா. தங்கராசா, மருதடி வீதி, யாழ்ப்பாணம். 2. மு. வ. மாணிக்கவாசகர், வேலணை. 3. க. கு. இராதாரமணன், கொட்டடி 4. செ. கேசரத்தினம், வரிசப்பிலம். 5. A. பாலச்சந்திரன், சண்டிருப்பாய். 6. சரோ ஏரம்பு திருக்கோணமலை. 7. த. கணேஸ், மாகியப்பிட்டி. 8. சி. சுந்தரலிங்கம், இணுவில். 9. த. கதிரவேற்பிள்ளை, கரவெட்டி.

# அறிவு வளர்ச்சிப் போட்டி. இல 7.

முதற் பரிசு: 15 ரூபா — இரண்டாம் பரிசு, 10 ரூபா

முடிவு திகதி: 20—12—60.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 கு | 2 க | ன் | ■ | 3 | 4 சு |
| 5 | | | 6 மை | ■ | |
| 7 | | ■ | 8 | 9 வ | |
| ய | ■ | 10 | | | ■ |
| 11 | | க | ■ | 12 | 13 டை |
| ■ | 14 | | ரை | ■ | |

சென்ற இதழில் மேலிருந்து கீழ் 4—வது குறிப்பில் மகாபராக்கிரம பாகுவின் தாய் இவள் என்பதை "மகா. பராக்கிரமபாகுவின் சிறியதாய் இவள்" எனத் திருத்திக் கொள்க. இத் தவறு காரணமாக, முடிவு திகதியை 20-12-60 ஆக மாற்றியுள்ளோம். —போட்டி ஆசிரியர்.

இன்பம் தரும் இனிய உணவு வகைகட்கு

**இன்ப நிலையம்**

சுவை நிறைந்த
விலை குறைந்த
சிற்றுண்டிகட்கு,

**இன்ப நிலையம்**

நறுமணம் மிகுந்த காப்பி,
தேநீர் பானங்கட்கு,

## இன்ப நிலையம்

உங்கள் திருப்தியே எங்கள் மகிழ்ச்சி.

கல்யாண வைபவங்கட்கும் மற்றும் விசேடவிழாக்களுக்கும் ஓடர் பலகாரங்கள் செய்து கொடுக்கப்படும்.

இன்ப நிலையம்
ஸ்டேசன் வீதி, : : சுன்னாகம்.

# கலைச்செல்வி
# இளைஞர் மன்றம்.

கலைச்செல்வங்களே!

வணக்கம் கலைச்செல்வியில் முதிர்ந்த எழுத்தாளர் எழுதும் பகுதிகள் தரத்தில் தவறுவதில்லை. அதே தரத்துக்கு நீங்கள் உயரவேண்டும் என்றதல்ல கருத்து. உங்கள் வயது அறிவு ஆற்றல்களுக்கேற்ப தரம் இருக்கவேண்டும். எழுத்துலகில் திருட்டுப்பழக்கம் மரியாதையையும் இழக்கச் செய்யும். சொந்தமாகவே கற்பனையை வளர்த்துக் கவிதைகள் கட்டுரைகள் கதைகள் படைக்கவேண்டும். எழுதுவதை ஆர்வமும் அக்கறையுமாக புல்ஸ்காப் தாளில் ஒருபக்கத்தை உபயோகித்து இருதாள்களுள் அடங்க எழுதுதல் வேண்டும். எழுத்துத் தெளிவு முக்கியம். புனைபெயர் வைப்பதில் சிந்தையைச் செலுத்தவேண்டாம். புனைபெயர் வைத்துக்கொண்டதும் எழுத்தாளரான திருப்தி ஏற்பட்டுவிடும். அப்பால்...? ஆனதால் உங்கள் சொந்தப் பெயரில் எழுதும் போதுதான் பெருமை ஏற்படும். இளம் எழுத்தாளராகி முதியவர்களாகும்போது புனைபெயரில் தோன்றலாம். கலைச்செல்வியில் இளைஞர் வட்டாரத்தில் இருப்பவர்கள் அனைவரும் கலைச்செல்வங்களாக என்றோ ஒருநாள் ஒளிரும் நன்னாள் எதிர்படாமற்போகாது. அவரவர் எழுத்து ஓவியங்கள் தரம் பார்த்து வெளியிடப்படும். அவ்வப்போது அறிமுகமுஞ் செய்து வைக்கப்படும்.

"இளவரசு"

## கலைச் செல்வி இளைஞர் மன்றம்.

முழுப் பெயர்: ......................................

முகவரி: ......................................

பாடசாலை: ......................................

வயது: .................... பிறந்த திகதி: .........

திகதி: ............... ..............................
கையொப்பம்

## உறுப்பினர் பட்டியல்

இல:

91. பி. டேவிற், அர்ச். சூசையப்பர்சாதனு கழகம், மகாழும்புத்துறை
92. R. விஜயலக்ஷ்மி, 'கங்கா வாசா' கோப்பாய் வடக்கு.
93. வே. நாகலிங்கம், 299, பிரதானவீதி, ஹல்துமுல்லை.
94. பெ. வள்ளியம்மை, அண்ணாமலை வீதி, சுதுமலை.
95. மு. கணேசானந்தன், பரி ஜோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்.
96. ஆ. சிவஞான சுந்தரம், இந்து ஆங்கில பாடசாலை, புலோலி.
97. ஏ. எல். எஸ். ஹமீத், 101 2 மீருனியா தெரு, கொழும்பு.
98. மு. காளித்தம்பி, இந்து ஆங்கிலக் கல்லூரி, புலோலி
99. சி. சிவஞானசுந்தரம், ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னுகம்.
100. க. குணரத்தினம், செங்குந்த இந்துக் கல்லூரி திருநெல்வேலி.
101. அகமத் ஜின்னு ஷரிபுதீன், "ஆயிஷா மன்ஸில்," பெரியநீலாவணை
102. வை. பிராணதார்த்திகரன், ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னுகம்.
103. S. V. றெஜி வேதநாயகம், புனித பெனட்டிக்கல்லூரி கொட்டாஞ்சேனை,
104. ச. இரவீந்திரநாதன், வீமன்காமம் ஆங்கிலபாடசாலை, தெல்லிப்பழை.
105. கை. பொன்னுத்துரை, பரமேஸ்வரக் கல்லூரி. யாழ்ப்பாணம்.
106. பொ. நடராசா, ஸ்கந்தவரோதயக் கல்லூரி. சுன்னுகம்.
107. த. புவனேஸ்வரி, மகளிர் உயர்நிலைக் கல்லூரி பண்டைத்தெருப்பு.
108. எஸ். பூரணி, செங்குந்த இந்துக் கல்லூரி, திருநெல்வேலி
109. M. R. ஆனந்த குமார், புஷ்பாடியூட்டரி, ஹல்துமுல்லை.
110. க. சோதீஸ்வரன், அரசினர் மாவித்தியாலயம், காரைதீவு
111. டானியல் வசந்தா, மகளிர் பாடசாலை சுண்டிக்குளி.
112. க. சிவராசா, முரசுமோட்டை மு. வி. சாலை. கண்டாவளை.
113. இ. சாரதாதேவி. இந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை.
114. த. சோமசுந்தரம், அரசினர் மத்திய கல்லூரி, பசறை.
115. ஏ. பாலசரோஜினி, "பாக்கியகிரி", திருக்கோணமலை.
116. வ. அ. சண்முகராசா, செங்குந்த இந்துக் கல்லூரி திருநெல்வேலி.
117. V. D. அரியதுரை, வெஸ்லி உயர்தர பாடசாலை, கல்முனை.
118. பா. இராஜ இராஜேஸ்வரி மயிலணி, சுன்னுகம்.
119. வை. சச்சிதானந்தசர்மா இந்துக் கல்லூரி, காரைநகர்.
130.. செல்வி நஜ்மா மொஹிதீன், "பியர்ஸ் கொற்றேஜ்" நுவரெலியா.
121. சு. அஹமட் ஜுனைட், சிரேஷ்ட பாடசாலை, ஏருவூர்.
122. க. சோதீஸ்வரன், 1ம் குறிச்சி, காரைதீவு,
123. என். சித்திரவேல், தபாற்கந்தோர் வீதி, சின்னக்கிண்ணியா.
124. உ. வெ. முஹிதீன் பாஷா, சிரேஷ்ட பாடசாலை, ஏருவூர்.
125. செ. தெய்வேந்திரம், ஆடியபாதம் வீதி, நல்லூர்.
126. கே. எம். எச். சித்தி பளிலா, கிண்ணியா.
127. க. மீனலோசனி, பருத்தியோலை, கந்தரோடை.
128. த. பொன்னம்பலம், ஸ்ரான்லி மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.
129. சீ. திவஞானசுந்தரம், ஏழாலை மேற்கு, சுன்னுகம்.
130. சி. நந்தகுமார். அளவெட்டி வடக்கு, அளவெட்டி.
131. இ. இராசரத்தினம், திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி.
132. த. சரோஜினிதேவி, "செல்லகிரி", மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
133. மு. மு. மன்சூர், இறக்குவானை.
134. இ. பாஸ்கர மூர்த்தி. சோமாஸ்கந்த கல்லூரி, புத்தூர்.
135. ஆ. சிவபாத சுந்தரம், இந்து ஆங்கில பாடசாலை, புலோலி.

—தொடரும்

# மாணவர் கடமை

"விளையும் பயிர் முளையிலே" என்று அறிஞர்கள் கூறுகிறார்கள், ஏன்? நாம் பிறக்கின்றோம்; இறக்கின்றோம். இது இயற்கை. பிறப்பிற்கும், இறப்பிற்கும் இடையில் பல பருவங்கள் எம்மைத்தாண்டி விடுகின்றன. இப்பருவங்களில் எது சிறந்தது என்றால் அது மாணவர்பருவமாகத்தான் இருக்கவேண்டும்.

இந்த மாணவப்பருவத்தை நாம் அழகானமுறையில் பயன் படுத்திக் கொள்ளவேண்டும். இப்பருவம் இனி மேல் வராது. காலத்தை அறிந்தே பயிர்செய் என்று கூறுகிறார்கள். இம்மாணவப் பருவத்திலே நாம் சீரானமுறையில் நடந்தாற்றான் பெரியவர்களானாலும் எமது வாழ்வை நல்ல முறையிலே நடத்த முடியும்.

பொதுவாக நமது தாய் தந்தையர்களை எடுத்துக்கொண்டால் எல்லோரும் பணக்காரர்களாக இருக்க மாட்டார்கள். அவர்கள் வெயில், மழை என்று பாராது உழைத்து எம்மைக் கல்விகற்பதற்காக அனுப்புகிறார்கள். நாம் இங்கு கடமையை மறந்து வீண் விளையாட்டுக்களில் காலத்தைக் கழிக்கிறோம். இதனால் நாம் எமது எதிர்காலத்தைப் பாழாக்குகிறதுமன்றி தாய் தந்தையரையும் அவமானப்படுத்துகிறோம்.

முயற்சியுடையார், இகழ்ச்சியடையார் என்றெல்லாம் பெரியவர்கள் கூறுகிறார்கள். நாம் எக்காரியத்திலும் முயற்சிசெய்து அதில் வெற்றி காண வேண்டும். ஒரு முறை முயற்சி பலனளிக்காவிட்டால் மீண்டும் மீண்டும் முயற்சிசெய்து முன்னேற வேண்டும். அவ்வாறு செய்தால் தான் நமது வாழ்க்கையிலும் வெற்றி காணமுடியும். மேற்கூறிய "விளையும் பயிர் முளையிலே" என்பதன் பொருளை ஆராய்ந்தால் நமக்கு எவ்வளவோ கருத்துக்களைக் காட்டுகின்றதல்லவா! இந்தப் பருவ வாழ்க்கையில் துன்பங்கள் பல நேரிடலாம். அவற்றைப் பொருட்படுத்தக்கூடாது. இரவும் பகலும் மாறி மாறித் தோன்றுகிறது. அதுபோன்று இன்பமும் துன்பமும் மாறிமாறி வரும். இன்பத்தைக்கண்டு மகிழ்ச்சியடையவோ, துன்பத்தைக்கண்டு கவலைப்படவோ கூடாது. எதற்கும் எம்மிடம் சகிப்புத்தன்மை வேண்டும். வீண் செயல்களிலும் தேவையற்ற காரியங்களிலும் கெட்ட நண்பர்களுடனும் எமது பொன்னான நேரத்தை மண்ணாக்கக் கூடாது.

இப்பொழுது நாம் மாணவர்களாக இருக்கின்றோம்; இன்னும் சில காலம் செல்ல பெரியவர்களாகுவோம். அப்பொழுது எம்மை அதிகமான தொல்லைகள் எதிர் நோக்கிக் கொண்டிருக்கும். அதை கவலைப்படாமல் வரவேற்கக் கூடியவர்களாக நாம் இருக்கவேண்டுமானால் இப்பொழுதே எமது உள்ளத்தை நல்லவகையிலே பண்படுத்திக் கொள்ளவேண்டும். அப்பொழுது தான் நாம் உண்மையான மாணவர்களாகத் திகழுவோம்.

'கற்றதனாலாய பயனென் கொல் [வாலறிவான்

நற்றாள் தொழா அர் எனின்"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் சொற்களுக்கேற்ப கல்வியைக்கற்று எமது வாழ்வை சீரான முறையில் அமைத்துக் கொள்ளவேண்டும் அப்பொழுதுதான் நாம் உண்மையான மாணவர்களாக ஆகமுடியும்.

—கே. எம். எச். காலிதீன்.

**திருப்பள்ளியெழுச்சியுரை:** உரையாசிரியர். ஸ்ரீமத். சி. சுப்பிரமணிய தேசிகர்; கலைமகள் மன்றம், காரைநகர். இலங்கையிலுள்ள பிரபல புத்தகசாலைகளில் கிடைக்கும். விலை: 35 சதம்.

அறிவாற் சிவமேயாய மகான்களின் வாக்குக்களுக்கு மெய்யுரை காண்பது, சாதகராயினோருக்கே ஓரோர் அமயத்தில் ஓரளவு கைகூடுவதொன்றாயினும், கருவி நூல்களையும் பொருணூல்களையும் வரன்முறை பேணிப் பாடங்கேட்கும் பாக்கியம் படைத்தவர்கள், சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து ஓதுவதற்கு ஒருவாறு உபகாரமான முறையில் மிக்க அச்சத்துடன் உரை செய்யும் ஒரு வழக்கம் இருந்து வருகிறது. அந்தவகையில் பலவேறு தகுதிப்பாடுகள் ஒருங்கு அமையும் வாய்ப்புப்பெற்றவர்களான எங்கள் தேசிக சிகாமணி அவர்கள் திருப்பள்ளியெழுச்சிக்கு ஒரு நல்லுரை வழங்கியிருக்கிறார்கள். இவ்வுரை இதுகாறும் அப்பகுதிக்கு எழுந்த உரைகளின் நலப்பாடுகளையும் தழுவிச் செந்தமிழ் வளங்கெழுமிச் சைவம் மிளிர்வதாய்ப் பொருள் உணர்ந்து ஓதி உருக முயல்வார்க்கு ஓர் ஊன்றுகோலாய் அமைந்திருக்கின்றது.

“என்வாழ்முதல்“ ‘கேட்டறியோம் உனைக் கண்டறிவாரை” வீட்டிருந்துஉணரும் நின்னடியார்” ‘மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின் வணங்கு கின்றார்“ ,இந்தப் பூமி சிவனுய்யக் கொள்கின்ற ஆறு” ‘புவனியிற் போய்ப் பிறவாமையில் நாள் நாம் போக்கு கின்றோம்” இவைபோன்ற தொடர்கள் அநுபவமுதிர்விற் கனிந்த கனிகள். இக்கனிகள் வாழ்நாள் முழுவதும் சிந்தித்துச் சிந்தித்துச் சுவைத்து அழுதூறுவார்க்கு இவ்வுரையின் இன்றியமையாமை இனிது புலமாம்.

பண்டிதமணி சி. க.


அதிர்ஷ்டம்! அதிர்ஷ்டம்!!

**மஹாலட்சுமி புத்தகசாலை,**

கே. கே. எஸ். றேட்,

**இணுவில்.**

துவிச்சக்கர வண்டிச் சேமிப்பு இயக்கம்.

(கட்டணத் தொகை : ரூபா 10/-)

1961ம் ஆண்டு தை மாதம் தொடக்கம் 28 மாதங்களிலும், பிரதிமாத அந்தத்தில் மாலை, 7 மணியளவில் தெரியப்படும் ஒழுங்குக்கேற்ப, புதிய துவிச் சக்கர வண்டிகளை ஒவ்வொன்றாக அங்கத்தவர்கள் பெற்றுக் கொள்ளலாம். இந்நிரை ஒழுங்கிற்கேற்ப துவிச் சக்கர வண்டிகளைப் பெற்றோர், திரும்ப இயக்கத்திற்கு மாதாந்த கட்டணத்தொகை செலுத்த வேண்டியேற்படாமாட்டா. எஞ்சியுள்ள அங்கத்தவர்கள் யாவரும் 28ஆவது மாதம் 285/- ரூபாவிற்குக் குறைவில்லாது பெறுமதியுள்ள துவிச்சக்கர வண்டிகளைப் பெற்றுக் கொள்ள இன்றே இயக்கத்தில் விண்ணப்பித்துக் கொள்வீர்களாக!

**மஹாலட்சுமி ஸ்ரோர்ஸ்.**

கே. கே. எஸ். வீதி — இணுவில்.

கிளைகள்:

''தமிழகம்''
அல்வாய் வடக்கு,
பருத்தித்துறை.

''அறிவகம்''
அல்வாய் தெற்கு,
அல்வாய்.

# சிங்கப்பூர்க் கம்பெனி

128, 130, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

க
ட் ஸ்ரீ
ட
ட ஸ்ரீ
ங்
களுக்குத் தேவையான

சகலவிதமான பொருட்களும் மலிவு
விலையில் விற்பனை செய்பவர்கள்.

மலாயாவிற்கு கொழும்பு சென்னை மார்க்கமாகப்
பிரயாண ஒழுங்குகள் செய்பவர்கள்.

# THE MALAYAN TRADING COMPANY

128, 130, K. K. S. Road,
**JAFFNA.**

T' Phone : 547 T' Grgms : *Trading*

உங்கள் வீட்டுத் தேவைகளுக்கு வேண்டிய
சகல விதமான பொருட்களுக்கும்.

# விநோதன்ஸ் அன்ட் கம்பனி

106, ஆஸ்பத்திரி வீதி : யாழ்ப்பாணம்.

வீட்டுக்கு வீடு
விநியோக சேவை

House to House
Delivery Service

விபரங்களுக்கு :

தந்தி : விநோதன்ஸ் தொலைபேசி எண் : 286

# கிறிஸ்மஸ் பண்டிகை!

கிறிஸ்மஸ், புதுவருட பண்டிகைகளை
உங்கள்
உறவினருடனும்
நண்பர்களுடனும்
சந்தோஷமாகக் கழியுங்கள்
எங்களிடம் இருக்கும்

வகை வகையான வண்ணப் புத்தாடைகளை
வாங்கி அணியுங்கள்.

உங்கள் திருப்தியே எங்கள் மகிழ்ச்சி.

## B. J. அலோஷியஸ்,

32, & 34, பெரியகடை, : : யாழ்ப்பாணம்.

# சினிமாஸ் லிமிட்டெட்

சென்ற ஆண்டில் பல வெற்றிப் படங்களை அளித்து சினிமா ரஸிகர்களை மகிழ்வித்த 'சினிமாஸ்' ஸ்தாபனத்தினர் கீழ்க்கண்ட சிறந்த படங்களை அடுத்த ஆண்டில் ரஸிகர்களுக்கு அளிக்கின்றனர்.

## களத்தூர் கண்ணம்மா

## கைராசி

## ஜிம்போ

**உங்களூரிலுள்ள சினிமாஸ் திரைகளில் கண்டு மகிழுங்கள்!**

★ உயிரோவியமான
படங்களுக்கு



செல்லம்ஸ்

போன்:436. யாழ்ப்பாணம்.

Registered at the G. P. O. as a Newspaper. KALAICHEL




# சி. சி. சி.

# தாவர

## உரப்பசளைக் கலவைகள்

அதிக விளைச்சலுக்கு
உத்தரவாதமளிக்கிறது.

எமது உரப்பசளைக் கல
வைகளின் உதவியால்
பெருந்தொகையான நல்ல
விளைச்சலைப் பெறுவதற்கு
நீங்கள் திடமாக நம்பி
யிருக்கலாம்.

இலவச விளக்கப் பிரசுரத்திற்கு
தயவு செய்து எழுதுக:-

**கொழும்பு
கொம்மேர்ஷியல்
கம்பனி லிமிட்டெட்,**

[பெரிய பிரித்தானியாவில் இணைக்
கப்பட்டது, அங்கத்தவர் பொறுப்பு
வரையறுக்கப்பட்டுள்ளது]

தபால் பெட்டி 33.
கொழும்பு.




யாழ்—தமிழ் இலக்கிய மன்றத்திற்காக, சுன்னாகம், கலாதேவி அச்சகத்தில் அச்சிடுவித்து வெளியிடப்பட்டது.